சிலம்பு உ அ	நிருவளுவர் ஆண்டு ஆடி ஈகூஅ நு, ஆகஸ்ட், 1954	பாலை கூ உ

தமிழாசிரியர் மாநாடு

தமிழ்மொழி தொன்மைதொட்ட பழமையது; அதன் இனிய ஒலிநயமை சுவையுடையது, இதனிடை பழங்காலத்தில் முதல இடை கடையென மூசசங்கம அமைத்து மதுரையில் வளாதனா, இததமிழ இயல் இசை நாடகம் என மூவ்வகைப் பிரிவாகப பிரிதது அதைத திறம்பெற வளாத்தனாகம தமிழ்ப் பெருமக்கள.

இவர்கள் அறிவும் திறனும் ஆற்றலுமிக்காராயிலகினர்; இததிறம் மிக்காரே ஆசிரியரெனப்படுவோராவர் தமிழாசிரியர் கற்பன கற்று அறிவுததிறம் மிகோராய் விளங்குவோராவர். ஒருநாடு, முன்னேற்றம் பெற்றுளளதென்பதை அந்நாட்டின் மொழியைக்கொணடு நன்குணரலாம். அந்நிலையில் ஆய்ந்து பாாத்தால் நம் தமிழ், பழங்காலதொட்டு வளம்பெற்றுச் சிறந்த மொழியென்பது, அதன்கண் பரதுகிடக்கின்ற நூற்கருவூலச் செல்வங்களே நன்கு காட்டும்.

இரண்டாயிரம் மூவாயிரம யாண்டுகட்கு முற்பட்ட நூற் சுவடிகளைப் பார்த்தால், நம் நாட்டில் மொழியும் கலையும் பண்பும் அரசியலும் காதலும் அறமும் மறமும் பிறவும் எவ்வாறு ஓங்கி வளர்ந்து வளம்பெற்றிருந்தன என்பதை நன்கு அறியலாம.

"இரவலர் அவரைப்
புரவெதிர் கொள்ளும பெருஞ்செய் ஆடவர்
உடைமை ஆகும் அவருடைமை
அவா, இன்மை ஆகும் அவரின் மையே'

இரந்துண்பவரை எதிர்கொண்டழைத்துப் பொருள் வழங்கும் செல்வரின் உடைமை, இரவலருடைமையாகவும், அவர் வறுமை, செல்வரின வறுமையாகவும் கொண்டனா எனனும் பொதுவுடைமைக் கருத்துப் பலலாயிரம ஆண்டுகட்கு முன்னரேயே தோன்றிற்றுனல்,

[2]"யாதுமஊரே யாவருமகேளிர்'

என்னும் வேறுபாடறற பொதுநிலைக் கருத்துப் பிறந்ததானல்,

[3]"உள்ளது சிதைப்போா உளரெனப் படாஅர்
இல்லோா வாழுகைை இரவினும் இளிவு'

எனனுமவாழ்ககைைச் செமமையைப்பற்றிய கருதது்ககளும் இருக்குமானல், தமிழ்நாட்டின் பண்பாடு எவவளவு சிறந்ததாக இருந்துவநதுளது என்பதைக் காண்மின்.

இத்தகை அரிய கருத்துரைகளை—வாழ்க்கை முறைகளை—அக்கால நிகழ்ச்சிகளை—நமககுத் தெரியும்படி தமது அரிய பாக்களால் வடிதது்தந்தோர் ஆசிரியராகிய புலவர்களே. அவர்தம் வழித் தோன்றல்களே தற்காலத தமிழாசிரியர். கற்றுத் துறைபோய நந்தமிழாசிரியர்கள், வேறுமொழி கற்றுத் தேர்ந்த ஆசிரியரளவு உயர்வு பெற்றனரில்லை. ஆங்கில மொழி கற்றூர்க்குக் கொடுககும மதிப்பு, இந்தி போன்ற ஏனைய மொழிகளைக் கற்றுததேதறியவர்க்குக் கொடுக்கும் மதிப்பு அளவு, நநதமிழாசிரியர்கட்கு நாட்டிலும் அரசாங்கத்திலும் கல்லூரிகளிலும் கொடுக்கப்பெறுவதில்லை இது, நாட்டிலுள்ள அறியாமையைக் காட்டுகின்றதன்றி வேறன்று. மக்களுக்குப் பழமையில் பற்றின்மையும் புதுமையில் பற்றுங்கொள்வது இயல்பு. இம்முறையில் தாம பழகிய தம்மொடு பிறந்தது முதல் ஒன்றுக வந்த மொழியை மதிப்பதில்லை. இக் குறைபாட்டினல் பழதத்தைப் பளமென்றும் குறிப்பைக் குரிப்பென்றும்

1, 2. புறம் : ககூக, ககஉ. 3. குறுந்தொகை . உஅந.

பிழைபட எழுதுமை கீழ்நிலை பெற்றனர்; இதைக் குறித்து நாட்டுமக்கள் வெட்குவதுமில்லை, ஆங்கிலத்தில் (But) என் பதை (Put) என்று எழுதினால் எவ்வளவு தவறோ அத்தகைத தவறே இவ்வாறு எழுதுவதுமாகும். ஆனால் இதைபபற்றி மக்கள பொருட்படுதததுவதில்லை; தமிழில எப்படி எழுதினலென? எனற கருதததினால், இன்று பிள்ளைப பாண்டியன் போன்ற வீரர்கள இல்லாத குறை. இவ்வாறு மக்களிடையே தவறான கருதது ஏற்பட்டதனால், அஃது அரசியலாரிடமும் நுழைநது நாட்டு மொழியாகிய நம் தமிழ் புறகணிகபபடலா யிற்று. தமிழ்மொழி கொச்சையாக வீட்டிலும் நாட்டிலும் பேசப்படுகினறதன்றி, வேறு பயன்படுத்தக் கண்டிலேம்

அரசியலுக்கு ஆங்கிலமும் இந்தியும், பாடலுக்குத் தெலுங்கு, கடவுள வழிபாட்டுக்கு வடமொழி, கலவையாக்கிப் பேசுதற்குத் தமிழ என்ற நிலையில் இன்றிருக்கின்றது இவ் வாறிருநதால் நாடு எவவாறு முன்னேறும்? மொழி எவ்வாறு மதிப்புறும? இநநிலை மாறவேண்டுமேல் மொழியை உயாத் துதல் வேண்டுமை; அதற்கு அடிப்படையாக உள்ளோர் தமிழா சிரியர்கள்; அவர் உயர்வு, மொழி உயர்வு, அதன் உயர்வு, நாட்டு உயர்வு; நாடு உயர்நதால் செல்வமும் கலையும் சிந்தாது பெருகும். எனவே இதைக் குறிக்கோளாகக்கொண்டு அண்மையில் 11-7-54-ஆம நாள், சென்னைமாநிலத் தமிழாசிரியர் மாநாடு எனப் பெயரிய மாநாடு ஒன்று, நில்லை அண்ணாமலைப் பலகலைக் கழகப் பட்டமளிப்புவிழா மண்டபத்தில நாவலர் திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் தலைமையின்கீழ்ச் சிறப்பாக நடநதது, அம் மாநாட்டில் தமிழ்மொழிக்கும், நாட்டுக்கும, தமிழாசிரியர்கட்கும் வேண்டும் முதன்மையான நிலைப்றறிய பல முடிபுகள் செய்யப்பெற்றன. அதனுட் சிலவற்றை அடுதத பக்கத்தில் காண்க.

நாட்டில் இத்தகைய மாநாடுகள் கூடி மொழிக்கும் கலைக்கும் நாகரிகங்கட்கும் எழுச்சியுறத் தொண்டுபுரிவது குறித்துப் பெருமகிழ் கொள்கின்றோம் நாடு சிறக்க—மொழி வளர—கலை ஓங்க—தமிழாசிரியர்கள் முன்னேற்றமுற எல்லாம் வல்ல இறை அருளை வேண்டுகின்றோம்.

தமிழாசிரியர் மாநாட்டில் செய்த முடிபுகளிற் சில :

(க) தமிழ் முதன்மொழியாகி உள்ளமையின், இது காறும் தமிழாசிரியர்களின் ஊதியம்பற்றி விடுத்துள்ள அரசியலார் கட்டளைகள் தெளிவின்மையால், யாவற்றையும் நீக்கிவிட்டுத் தமிழாசிரியர்கட்கு (பிறமொழி ஆசிரியர்களின் தொடர்பிலிருந்து விலக்கி) தனி ஊதியத் திட்டம் அமைக்குமாறு அரசியலாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

(உ) தனித்த வித்துவான் பட்டம் பெறுவதற்குள்ள வயதுத் தடையை விலக்கவும் வித்துவான்கள எஸ். எஸ். எல். சி., பி. ஓ. எல். தேர்விற்குச் செல்லின், தமிழ்ப்பகுதிக்கு விலக்களிக்கவும, ஃபிரஞ்சுஇந்தியாவிலுள்ள ஆசிரியர்களுமம நம் ஆசிரியர்கள் பெறுமம தோவுச சலுகைகள் பெறவும சென்னைப் பல்கலைக் கழகத்தார் உடனடியாகக் கட்டளையிடுமபடி கேட்டுக்கொள்ளுகின்றது.

(ஊ) தஞ்சை மாவட்டத்தில் அரசாங்கத திட்டப்படி எல். டி. ஆசிரியாகளுக்கு ஊதியங கொடுத்து மொழி ஆசிரியர்களுககு அவ்வாறு செய்யாதனை அறிந்து இம்மாநாடு வருந்துகின்றது. மொழியாசிரியாகளுக்கும் எல். டி. ஆசிரியரைப்போல் அரசாங்கத திட்டப்படி ஊதியம் கொடுக்குமாறு மாவட்டத தலைவாகளை வற்புறுத்தும்படி அரசாங்கதனை வேண்டுகின்றது.

(சு) தமிழ்ப்பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் பாடப்புத்தகத் தேர்வுக்குழு (Text Book Committee) உறுப்பினர்களாகத் தமிழாசிரியர்கள் நியமிக்கப் பெறவேண்டுமென இம்மாநாடு வேண்டுகின்றது.

(ரு) அரசியலார் விடுமுறை நாட்களில் 'திருவள்ளுவர் திருநாள்' அல்லது 'திருக்குறள் நாள்' என்பதாகச் சூலைத் திங்கள இறுதிவாரத்தில் ஒரு நாளைக் குறித்து, அந்நாளைச் சென்னைமண்டிலம் முழுதும் பொது விடுமுறையாக அறிவிக்குமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

எழுத்தும் புணர்ச்சியும்

[செல்லாகுகிறார் நிரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

(செல்வி, நிலம்பு' உ அ, பரல்: கக-இன், நிஉசு-ஆம் பகுதி தொடராசரி.)

மெய்யெழுத்துக்களில் ஏறிநிற்கும் அகரவுயிரை இயல் நூலார் எழுத்தாகக் கொள்வதில்லை. அதனைச [1]சாரியை யென்றே வழங்குவர். உயிரெழுத்துக்களோத தனியாகச் சொல் லுமபோது 'கடம' என்னுஞ் சொல்லைச் சேர்த்துக் குறிலுக்கும் 'காரம' என்னுஞ் சொல்லைச் சேர்த்து நெடிலுக்கும அகனுள் ளும் 'கான்' என்னுஞ் சொல்லைச் சேர்த்து ஐ, ஔ என்னும் நெட்டுயிர இரண்டுக்கும வழங்குவர். மெய்யெழுத்துக்கள் பதினெட்டுக்கும 'கடம' என்னுஞ் சொல்லொன்றையே சேர்த்து வழங்குவர். இவைகளை 'சாரியை' எனபபெறுமம திருவளளு வதனில 'உ'வைக குறிக்க,

[2]'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

எனபதில் அகரமெனறே கூறியது காண்க. ஏனைய நூல்களி னும் இவ்வாறு ஆட்சிபெற்று வருதலைக காணலாம் எனவே தனி எழுத்துக்களகூடச் சாரியை யென்ற புணாச்சி பெற்றே இயங்குதலைக காண்கின்றோம

மொழிகளின் புணாச்சி

இனி, மொழிகள் எவ்வாறு சேர்கின்றன; அவைகளால் சொற்கள எவ்வாறு மாற்றம பெறுகினறன என்பனவற்றைக் காண்பாம

மொழி என்பது தனி எழுத்தேனும், இரண்டு, அதற்கு மேல் தொடாநத எழுத்துக்களேனும் ஒரு பொருளை உணாத்து மானல் மொழியெனபபெறுமம 'ஐ' எனபது தனி உயிர் நெட் டெழுத்து இது, இங்கே எழுத்தாக மட்டும் நிலலாது சொல் லாக வநதுள்ளது இது பலபொருள் குறித்த ஓரெழுத்து மொழி. தலைமை, வியபபு, மென்மை முதலிய பல பொருள் தருவதாகும்.

[3]'என்ஐமுன் நில்லன்மின் தெவவிர பலர் என்ஐ
முன்னினறு கல்நின் றவர்'

[4]'எனஐக்கு ஊராஇஃ தன்மை யாலும்'

---

1. சார் இயை - சேர்ந்து பொருந்தியது; இதில் எழுத்தும், சொல் லும் வரலாம். 2, 3. திருக்குறள்: க, எஎக. 4. புறம்: அநு.

[1]'ஐ வியப்பாகும்'
[2]'ஐதுவீழ் இகுபெயல் அழகு கொண் டருளி'

என ஆன்றோர் நூல்களில் வழக்காறற்று வருவதால் தெளி யலாம. இதுபோன்றே மற்றைய ஓரெழுத்து மொழிகளும். மாடு, வான் முதலியன இரண்டெழுத்த மொழிகள்; பாட்டு, அழகு, பொன்கண், கண்ணன் முதலியன இரண்டெழுத்துக் களுக்குமேல் வந்த சொற்கள்; இவைகளுள் உயிரெழுத்தை இறுதியாகவுடைய சொற்களும மெய்யெழுத்தை இறுதியாக வுடைய சொற்களும வந்துள்ளன தமிழமொழி மரபுபடி இறுதியில் நிறபன உயிர்களும, மெய்களுள வல்லெழுத்துக்கள் நீங்கலாகப பன்னிரண்டு மெய்களும ஆம் வலலெழுத்த, வண்மை (வலிமை பெரிய) ஒலியுடைமையால் இறுதியில் முடிவ தில்லை. கங்குகையின்றிப பெருக்கெடுதோடுப வெளளநீர, இடையில் தடைப்பட்டு நிற்பதில்லை, தடுத்த அணைகோலினு ளும் .துகளுள் அடங்கி நில்லாத அலைகளோத் தகாத்துக்கொண டாவது, அணையான்து தகாக்குமி அளவில்லாத திண்மை பெறற இட்டிகைகளால் ஆக்கபபெற்றிருக்குமானல் அவ்வணை கட்குமேல் வழிந்தாவது, செல்வதைக் காண்டுமனறே? அது போன்றே, வல்லெழுத்துகளும கடையில இறுத ஏனைய மெலி இடையெழுத்துக்களால தடையேறபடுமானல், அவை களையும் தன் ஒலியாக மாற்றிக்கொண்டு வீறுபெறறு வழஙகலான தமிழ்மொழிகடட் காண்கின்றோம் 'இரவிந்திரநாத,' 'இராசேந்திர பிரசாத,' 'நா,' (Nut) 'வாட்ச்' (Watch) முதலிய வேற்று மொழிச் சொறகள த, ட, ச முதலிய வண்மை யொலியால் முடிந்துநிற்றலைக் காண்கினறோம. இவைகளான தமிழில் எழுத முற்பட்டால இரவிந்திரநாது, இராசேந்திரபிசாது, நட்டு, வாட்சு என உயிரவருதே முடிகின்றது 'ஏன் இவ்வாறு முடிகின்ற' தென வினவின, தமிழ் இயற்கைச் செமமொழி, .து, உரதன ஒலியால் முடிவதில்லை, பேரொலியான து இறுதியில மெல லொலியால் முடிவதை நாம பண்டுமுற கேட்கினறோமனறே? பெருமழை பொழியுங்கால இடி. இடித்நலைக் கேட்கின்றோம. அவ்விடிமுழக்கம் முடியுமபோது குறைந்த ஒலியால் முடிவதைக் கேட்கின்றோமன்றே வான வெடிகளும பேரொலியோடு வெடித்து, இறுதியில் சிறலொலியோடு முடிதலைக் கேட்கினறோம. இன்னன போன்றே நம தமிழ்மொழி, இயறகையோடு தோன்றிய இயல்மொழி ஆகலான, இறுதியொலி வல்லொலியாக முற்றுவதில்லை. இவ்வியற்கை, பழஙகாலநதொட்டு நாட் டிலும் ஏட்டிலும் இன்றுகாறும் மாறாது வழஙகுதல இறும்பூது பயப்பதான்றாகும்.

---

1 தொல்: உஅடு. 2. சிறுபாண்: கக

தமிழ்மொழியில் வல்லொலி மெல்லொலி இடையொலிகள் ஒரே அளவிற்றாக இருப்பன தனிச்சிறப்புக குறிமையாகும். இததனக இயற்கைத்தனமை பிறமொழிகளுக்கு இலலை. கடுஞ சொறகள் பேசும்போது வல்லொலிகள் மிகுவதையும, வணக்க மாகப் பேசுங்கால் மெல்லொலி இடையொலிகள் பயின்று இயறகையாக வருதலையும் அறிகின்றோம. இதனலும் இயற் கைச செம்மொழி தமிழ் என்பதை அரண்செய்கின்றது.

இவ்வாறாக வரும் தமிழமொழிக்கடலுள் நிறைந்துளள சொற்களில் முதலில் நிற்கும் மொழி நிலைமொழி என்றும், அதன்பின் நிற்கும் மொழி வருமொழியெனறுமை கூறுவர், இயல் நூற்புலவர்.

இயல்புப் புணர்ச்சியும் வேறுபடு (விகாரப்) புணாசசியும்

புணாச்சியானது, இயல்புப புணர்சசி, வேறுபடு புணர்சசி யென இருவகைப்படுமை இயலபுப புணர்ச்சி நிலைமொழியும் வருமொழியுமை ஒன்றுபடுங்கால் ஒரெழுத்து முதலியன தோன் றல், திரிதல், கெடுதல முதலியன இன்றிப் புணாவது வேறுபடு புணர்ச்சி மேறகூறியவற்றுள ஒனறே பலவோ வேறுபடுதல் ஆகும் இவறறுள நிலைமொழி ஈறறில உயிரும், வருமொழி முதலில் உயிரும் வந்தால இரண்டிடததுமை உயிராகலான, உயிரும் உயிருமை சேராது, இணையாது; இருளும் ஒளியுமபோல. இவைகளை ஒன்றுபட இணைப்பதற்கு இடையே ஓர் மெய்யெழுத் துத்தோன்றி அச்சொறகளை ஒன்றுபடுத்தும் இதறகு இயல் நூலார 'உடம்படுமெய்' என்பர். உடமபடுமெய், உடமபாக அடுக்கும் மெய், அலலது உடமபடுத்துமை—நிலைமொழி வரு மொழி இரண்டையுமை ஒன்றாக இணைக்குமை மெய் என்பது பொருளாகும். உயிருகளும் உயிருக்குமை சோக்கை நிகழும் போது தோனறுவது. இவ்வுடம்படு மெய்யுமை ஒலி இயைபுக் கேற்பவே தோன்றும், இ, ஈ, ஐ என்னும் இந்த மூவுயிருமை மேல்வாயப்பல்லுமை அடிநாவின ஓரமுமை ஒற்றப் பிறபபனவாத லால், இவைகளோடொத்து மேலவாய்ப பல்லின் சிறிதளவு நாவினிமபு தொடுமாறு பிறக்குப ஒலியுடைய 'ய்'கரம உடம்படு மெயயாக நடுவில் வந்தடுக்குப, ஏனைய ஒன்பது உயிரகளுக்கு நடுவே அவைகளோடொத்த ஒலிஇயைபுடைய 'வ்'கரம் வந்தடுக்குப இவைகளை ஒலித்துப் பாரதது நுட்பமாக காண்க. இம்மெய்கள், நிலைமொழியின்கண் வருமை உயிரகட்குச சாரபாகவே தோன்றும். விரிப்பின் நீளுமாதலால, இவைகளைத தொல்காப்பியம் முதலிய இயல்நூல்களிற கண்டு தெளிக.

இவ்வுடம்படு மெய்கட்கு எடுத்துக்காட்டுக் காட்டுவாம:

திரி + அழல்	= திரியழல்	இகரத்தின்முன் யகரம் தோன்றிற்று.
நீ + அழகன்	= நீயழகன	ஈகாரத்தினமுன் ,, ,,
பனை + ஓலை	= பனையோலை	ஐகாரத்தின்முன் ,, ,,
வந்த + அரசன்	= வந்தவரசன்	அகரத்தின்முன வகரம் தோனறிற்று.
பலா + இலை	= பலாவிலை	ஆகாரத்தின்முன் ,, ,,
திரு + அடி	= திருவடி	உகரத்தின்முன் ,, ,,
கூகூ + என்றன	= கூகூவெனறன	ஊகாரத்தினமுன ,, ,,
எ + அணி	= எவ்வணி	எகரத்தின்முன் ,, ,,
நன்றே + இன்று	= நன்றேவின்று	ஏகாரத்தினமுன் ,, ,,
ஒ + அது	= ஒவ்வது	ஒகரத்தின்முன ,, ,,
கோ + அழகன	= கோவழகன்	ஓகாரத்தினமுன் ,, ,,
கௌ + அணில்	= கௌவணில்	ஔகாரத்தினமுன் ,, ,,

என, வந்தவாறு காண்க. பிற சொற்களிலும் இவ்வாறு உடம்படு மெய்யாகப் புணர்தலை நூல்களில காண்க இவற்றுள ஏகாரத்தின் முன் வகரமும யகரமும உடம்படு மெய்யாக வரலாம

இவ்வுடமபடுமெய் பொருள்நோக்கியோ நோககாதோ தோனறுமஎனிரா ஏனைய மெய்ந்நிறறே உயிராமுதலாவது மெயம் முதலாவது புணருமேமல இயலபாகவும வேறுபட்டும தோன்றல் திரிதல் கெடுதல முதலிய பல்வகை வேறுபாட்டோடும புணரும. இவைகளையெலலாம தொலகாபபியம போன்ற இயல் நூல்களில் பரக்கக் காணக ஆயினும புனபாகட்கு விளகும பொருட்டாக ஈங்குச சிலவறறைச் சுட்டிச் செலலலாமெனக் கருதுகின்றேம. உயிருமம உயிரும் புணரும்வகை மேற்கூறியபடியேயாம். இனி, மெய்யெழுதது்துகளின் புணாப்பு வருமாறு

உயிரோனும் மெய்யேனும ஈறுகவுள்ள நிலமொழிகளோடு மெயமமுதல் வருமொழி புணருங்கால் பொருளநோக்கித் தோன்றல முதலியன வேறுபாட்டுடன புணர்ந்தியலுதலை வழுக்கினும செய்யுளினும காணலாம.

மொழிப்புணர்ச்சிகளை வேற்றுமை அல்வழி என இரு வகையில அடககி வரையறுத்தனா நந்தமிழ்ச் சான்றோ. அவாதமம அஃகியகனற அறிவாற்றலை என்னென்பேம! என்னென்பேம! பெயரின் பொருளை வேறொரு பொருளாக மாற்றுவதால் வேறறுமைப் பொருளென்றும அஃதலலாத வேறுபடுத்தாத எல்லாவற்றையும அல்வழிப பொருளென்றும பிரித்தனர் அவ்வழி - அல்லாதவழி · வேற்றுமையல்லாத வேறொரு பொருள் தருவது என்னும பொருள்படுவதாகும. இவ்விரண்டனுள கடல்போற பரந்துபட்ட தமிழ்மொழிச்சொற்கள் அடககப்பெற்றிருப்பதை உணாநதினபுறுக.

இவ்வேற்றுமை அல்வழிப் புணர்ச்சிகளுள், தோன்றல் முதலாக வேற்றுபாட்டைச செய்வது பெரும்பான்மையும வல்லெழுத்துக்களே. அவற்றுள்ளும மொழிக்கு முதலாகாத ட, றக்களை ஒழித்து ஏனைய ங, ச, ஞ, ப-க்களே தன் இனமல்லாத மெல்லின, இடையின எழுத்துக்களைத தன்னினமாக மாற்றுவனவாகும். தமிழ்மொழி இயற்கையான மொழியாதலின், இவ்வேறுபாடு இயலபாகவே தோன்றுகின்றன. இஃதுகூட அறிய இயலாத சில அறிஞரென்னக் கூறிக்கொள்வோர் வலிமுன் தோன்றும் மெலி, இடைகளைத் திரியாது புணர்த்தெழுதித் தம் புன்மை தெரிபபாராயினர.

உலகில் மெலியவன் வலியவன்முன் நின்று வெல்வதில்லை; தோல்வியே உறுவதைக் காணகின்றோம். இஃது இயற்கையாக நிகழும நிகழ்ச்சியாகும். இதுபோன்றே வலிமுன எதிர்நிற்கும் ஏனைய மெய்கள் தம வடிவந்திரிந்து வல்லினமாக வேறுபடுகின்றன. காட்டாக :

கல்+சட்டி · இதில் வலிமுன் இடை நிறகின்றது, இபபோதுள்ள வடிவில் இவவிரு சொற்களும ஒன்றுபடாத நிலையில் கல் சட்டி என நிற்பதை அறிகின்றோம் இவை இரண்டு சொற்களும் ஒன்றுக இணைந்தபோது கறசட்டி என லகர இடையெழுத்து றகர வல்லெழுததாக மாறுவதைக் காண்கின்றோம். இவ்வாறு புணர்ததாது கல்ச்சட்டி என, எழுதினால் லகர ஒலி, தன் மென்மையினும மிக மென்மையாகிச சகர ஒலியே மிக் கொளித்தலும நாவால் ஒலிகுமபோது அசசகரம் வன்மைக்குரிய ஒலியின்றியும் இடைமைக்குரிய ஒலியினறியும ஒலிப்பதை உணரலாம. இவைகளைப் பலுக்கி (உசசரித்து)க் காது கொடுத்துக்கேட்டுத் தெரிந்துணர்க. ஆகவே, இயற்கைமுறைப்படி புணர்வதால் லகரம றகரமாக மாறுவதேயாகும. இஃதே இயற்கை மொழியாகிய நம் தமிழ்மொழியின் தனமைகு ஏற்ற முறைமையுமாகும். பொற்பு என்னுஞ சொல் பொல் என்னும் முதனிலையும் பு என்னும் கடைநிலையும் பெறற பண்புப்பெயர். இதைப் பொல்ப்பு என்று சிறுமகாரும் கூறாது, அது தன் மழலை பேசுங்காலங்கூடப் பொற்பென்றே குழறிக் குழறிப் பேசுதலைக் காண்டுமனறே.

(தொடருமம)

அன்புநிலைகண்ட ஆயிழையார்

[பண்டித, வித்துவான், திரு. த. வடிவேலன்]

'உலகமென்ப துயர்ந்தோர் மேற்றே' எனக்கூறிய தமிழன் இந்திரர்க்குரியது அமுதம். அமுதம்தான் கிடைப்பதாலும் அதனை இனிமையானது எனக்கருதித் தாமே தனிதுண்ணு தவர்; எவருடனும வெறுபபடையாதவர்; அச்சமகொணடு சோர்வடையாதவர்; புகழ் வருமாலல் தமமுயிரையுங கொடுக் கும் விருப்புடையவர்; பழிச் செயலால் உலகம முழுவதும் பெறலாமெனினும அதனை விரும்பாதவர், மனதிலே வருத் தமேயில்லாதவர், தமகெனை முயலாது பிறாக்கென முயல் வோர் எவரோ அவரே உயாநதோர எனக் கண்டான். அவாக ளாலேயே இவவுலகும அழியாது நிலைபெற்று நிற்கின்றதென எடுத்துரைததான். உலகு நிலைபெற உததமரே காரணமாவ ரென உலகிறகு எடுத்துரைத்த தமிழன் உலகில் ஒருவரால் ஒரு வர்க்கு ஆக்கமோ கேடோ வருவதில்லை என்ற உணமை உணர்ந தான். உண்மையுணாநத அவனிதயத்தில "யாதுஊரே யாவருங் கேளிர்" என்ற உயரிய கொள்கை நிலைப்பதாயிற்று அவனித மான பரந்த மனநிலையால் தமிழ்நாடு அன்பென்னும அரும் பண்புகொண்டு ஆக்கமடைவதாயிற்று.

அரசியலினிஃதமைவதறகு மக்களின வாழ்வு நிலையே அடிப் படையாகும் எனத கருதினர் தமிழர்கள அதனால தமது இல்லற வாழ்வினை நல்லறவாழ்வாக அமைத்துக்கொணடாகள. அன்று தமிழ்நாட்டில் பணமபேசி மணங்கூடும் பிணவாழ்வில்லை. உளங்கூடி மணமபுணரும் உயரிய நிலையே இடம்பெற்றது. இல்வாழ்வின் உண்மையுணர்ந்து உளம் விருமபும காதலனை மணமபுணர்ந்து இல்வாழ்வின் மாட்சி இதுவென உலகிற் குணர்த்திய தமிழர்கள் இன்றுவரை தமது வாழ்வுநிலையை எம்முன் காட்டி எம்மையும உயரிய வாழ்வுநெறிக்கு இட்டுச செல்லும் உறுதுணையாய் நிற்கின்றார்கள். இதனைப பண்டைய தமிழனின் பண்பட்ட வாழ்வினை எடுத்துரைக்கும் இலக்கியங் களே எமக்கு எடுத்தியமபுகின்றன.

அறிவின் வழிப்பட்ட தலைவன் தலைவியரது உள்ளங்கள் ஒன்றையொன்று பற்றுகின்றன. அவர்கள் உளவிருப்பின்படி மணமம நிகழ்கின்றது தலைவி தலைவன் வீட்டில் மனமுவந்து வாழ்கின்றாள். தலைவனது மனங்களிக்க வாழ்வதே நலவாழ் வாகும் என்ற உண்மையுணர்ந்தவள் அவள். தன் கணவனின் யாதொரு குறையும் நேராவண்ணம் பாதுகாப்பதே தன் கடமை

யெனக் கொள்கின்றாள். அவனுடல் நலம்பெற நல்லுணவட்டு ஊட்டுதல் வேண்டுமெ என்ற பெருவிருப்புடையவளாகின்றாள். கணவனே உயிரெனக் கொண்ட உளத்துடன் வாழ்ந்த உதகமி யின் வாழ்வுநிலையை அறிதல் வேண்டுமென்ற ஆவலுடன் அவளைப் பலகாலம் போற்றி வளர்த்த செவிலித்தாயானவள் தலைவன் வீட்டினை அடைகின்றாள். கணவனுக்கு இன்று தயிர்க் குழம்பு சமைத்துக் கொடுத்தல் வேண்டுமென்ற விருப்பம் தலைவிக்கேறபடுகின்றது தயிரினை எடுக்கின்றாள்; அதனைக் கையிற்றற் பிசைகின்றாள்; நேரந்தவறாது உணவளிக்க வேண்டு மென்ற பேராவல தயிர்பிசைந்த கையினைக கழுவல் வேண்டு மென்ற ஒழுங்கு முறையினைச் சுவனிக்க இடந்தருவதாயில்லை; தான் உடுத்திருந்த ஆடையவிழ்ந்த நிலைகண்டு தயிர் பிசைந்த கையினால ஆடையை உடுக்கின்றாள், கண்கள் புகையால்வருத்த மடைவதையும் நோக்காது தானிதம செய்கின்றாள; பிசைந்த தயிரினையும உடன்கலந்த தயிர்க்குழம்பு சமைக்கின்றாள்; கணவ னுக்கு உணவு கொடுக்கின்றாள், கணவன் உண்கின்றான், தான் கொடுத்த உணவால் கணவனை இன்பமடைகினறனை என எதிர் நோக்கியிருந்த அவளுள்ளம மகிழ்ச்சியடையுமா? "இன்றைய உணவு மிகவும் இனிதாயிருக்கின்றதே," என்ற கணவனின் கூற்று அவள் செவியிற் படுகின்றது, அவளுள்ளத்திற பேரு வகை பூக்கின்றது, கணவன இனிதென உண்டான் என்ற உவகையின் காட்சி அவள முகத்தில வெளிப்பட்டுத் தோன்று கின்றது, காதலரின் அன்புகனிந்த இன்பவாழ்வினைக் காண் கின்றாள் செவிலி. வீடு திருமபுகினறாள. தலைவியின் தாய்க்கு மகிழசசியுடன் எடுத்துரைக்கினறாள, காதலரின் உளங்கலந்த வாழவின் மாட்சியினை.

"குளிதயிர் பிசைந்த காந்தள் மெலவிரல்
கழுவுறு கலிங்கநு கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குயபபுகை கமழ்த
தான்றழந் தட்ட தீம்புளிப் பாகா
இனிதெனக கணவ னுணடலின்
நுண்ணிதின் மகிழ்நதன் றுணைனுதல் முகனே"

(குறுந : கசுஎ)

என இக்காட்சியினைக் குறுந்தொகைச்செய்யுள் எடுத்துக் காட்டக காண்கினறோம் வாழ்வின வழிமுறையை உணர் கின்றோம்.

மணம் புணாந்து இன்பமுடன் வாழ்ந்த கோவலன், மாதவி கூட்டுறவால் பல ஆணடுகள் தன்னை விட்டிருந்தான என்பத

னையும் பொருட்படுத்தாது மாதவியை நீங்கி வறுமையுடன் வந்த கோவலனை அனபுடன் ஏற்கின்றாள் கண்ணகி. பொருளீட்ட விரும்பிய கோவலன் சிலம்பு விற்பான் மதுரைக்குச் செலவோம் கூடவா என அழைக்கின்றான், அதனையும ஏற்று உடன்செல்கின்றாள், மதுரையின் புறத்தே மாதரி வீட்டில் தங்குகிறாள்; தன் கையால் உணவு சமைத்துத் தன் கணவனுக்கு ஊட்டுவதே இன்பமெனக் கருதுகிறாள், தன் கையால் உணவு சமைத்துக் கணவனை உண்பிக்கினறாள், அக்காட்சி கண்டோராம் ஐயையையும தவ்வையையும—மாதரியையும் மகளையும வியப்படையச் செயகின்றது அவாகளது அனபுகலந்த இன்பக் காட்சியைச் சிலப்பதிகார ஆசிரியா இன்பத்துறவி இளங்கோவடிகளும்,

"மெலவிரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொதுவாய்க குயத்து விடுவாய் செயய
....
கையறி மடமையிற் காதலற் காக்கித்
தாலப் புல்லின் வால்வெண தோட்டுக
கைவன மகடூஉக் கவின்பெறப் புனைந்த
செயவினைத் தவிசிற் செலவன் இருந்தபிற்
கழுமல ரஙகையிற காதல னடிநீர
சுடுமண் மணைடையில் தொழுதனள் மாற்றி
மண்ணக மடநதையை மயகெகாழிப் பனள்போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம விரிததீங்கு
அமுத முண்க அடிக ளீங்கென
அரசர் பினேனர்க கருமறை மருங்கின்
உரிய வெல்லாம் ஒருமுறை கழித்தாஙகு
ஆயர் பாடியில ஆசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வணணன் கொல்லோ
நல்லமு துண்ணும் நம்பி யீஙகுப்
பலவனை தோளியும பண்டு நஙகுலத்துத்
தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமந தீர்த்த விளக்குக கொலலென
ஐயையும் தவவையும் விம்மித மெய்திக்
கண்கொளா நமகனிவா காட்சி யீஙகு"

.என அழகுற அமைத்துக் காட்டுவாராயினர்.

உளம் பொருந்திய தலைவன் தலைவியரது கூட்டு வாழ்க்கை அன்பு மிகுந்த பண்புடன் விளஙகியமை காணும் பிரிவிற்

கண்ணும் காதலனை தம தெய்வமென்ப போற்றினர் தமிழ் மாதர் என்பதனையும் நாம காணமுடிகின்றது.

தலைவன் தலைவியை நீங்கிப் பொருள்தேடப் புறப்படுகின்றான். அப்பொழுதும தலைவிக்கு தான வருத்தமுற்ற தலைவன் பிரிகின்றானே எனற எண்ணமிழை இடமிலலை. செலலும் வழியில காதலன் துயருறுவானே என்ற எண்ணமே உளளதை உறுதிதுகின்றது. அவன செல்லும வழி நாயிற்றின வெம்மைம மிக்குடையதனைச் சொலலுகின்றாளே அவ் வெம்மை தலைவனை வருத்தாதிருபபதறகு வழிகாண்டல் வேண்டுமென ஆராய்கின்றாள. நாயிற்றை வணங்கின வெம்மை தணியுமென உரியவழியையும் அறிந்துவிட்டாள. ஆனாலும தலைவனை தெயவமெனக் கொண்ட அவளுள்ளம் பிறதெயவம போற்றுவது கணவன்மேல தான கொணட அன்புக்கு மாறு பட்டதாகும என்ற உணாச்சியை ஏற்படுத்துகின்றது. "காதலன் வருத்தமைடவதைத தடுக்க வழி கணேடன்; அவ் வழியும கற்பிற்கு மாறுபட்டதாயிற்று, எனது உளளதுதைக் கலஙகவைபடதாயுள்ளது, கணவன்மேல் யான் கொண்ட தொடாபறு அன்பினைத் துணிப்பதாயுள்ளது, துணைவன் தன் செயலால் தானே துன்பமைடவான், காதலை துன்பத்தை நீகுவது கற்புடை மங்கையர் கடன்; இவ்விடததில என் பணி செய்ய முற்படின், யான் கணவனை போற்றும காதல்நிலையை இழததல் வேண்டும், எனவே காதலன் வருத்தம் தணிக்கும் செயலை ஆற்றுவதற்கில்லை, அது என் தவறுமாகாது என முடிவு செய்கின்றாள்.

"துன்னி நங்காதலா துறந்தேகு மாறிடைக
கன்மிசை யுருப்பிறக் கனைதுளி சிதறென
இன்னிசை யெழிலியை இரப்பவு மியைவதோ
....
சினவாடச் சிறகருந்தின் சினந்தணிந தீகெனக்
கனைகதிர்க கனலியைக் காழுற வியைவதோ
....
முனிமுதன் மூழகிய வெம்மைதீர்ந துறுகென
வளிதருவு செலவனை வாழத்தவு மியைவதோ."

என்ற கலித்தொகைப் பாடலே காதலியின் உயரிய உளமாண்பினை உணர்த்தி நிறகக் காண்கின்றோம்.

கோவலனைப் பிரிந்திருந்த கண்ணகியை அடைந்த தேவந்தி என்ற பெண், கோவலனை பெறுவதற்குரிய வழியை எடுத்தியம்ப எண்ணுகிறாள். "காவிரி கடலொடு கலக்குமிடத்திலே

சோமகுண்டமம் சூரியகுண்டம் என்னும் பெயருடைய இரண்டு பொய்கைகள் உள்ளன அவற்றிலே நீராடிக காமவேளது கோயிலையடைந்து வணங்கிஞல மகனகையா கணவருடன் பிரியா திருந்து இன்புறலாம மறுமையிலும இன்ப உலகடைந்து கணவருடன் இன்ப வாழ்வெய்துவர் நாமும அவ்விதஞ செய்வோ''மெனக் கூறுகிறுள அதுகேட்ட கண்ணகி கணவனே தன் தெய்வமெனக் கொண்ட உளப் பாங்கால, "பிற தெய்வந தொழல கணவனைப்பெறற் நமகருரிய செயலாகாது," என விடை பகாகின்றுள.

கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில
மடலவிழ நெய்தலங கானற் றடமுள
சோமகுண்டஞ் சூரிய குணடந் துறைமூழ்கிக
காமவேள் கோட்டந தொழுதா கணவரொடு
தாமின் புறுவ ருலகத்து தையலார்'
போகஞ்செய் பூமியினும போய்ப்பிறப்பர் யாமொருநாள்
ஆடலு மென்ற அணியிழைகவ வாயிழையாள்
பீடன் றெனவிருந்த..... . ...

என்ற சிலபபதிகாரச செய்யுள் கணவனைப பிரிந்தும அவனையே கடவுளெனப் போற்றிய கண்ணகியின் கலங்காக் கறபுநிலையைச் சிந்திகக வைக்கின்றது

வாழ்விலும் பிரிவிலும் இல்வாழ்வின் மாட்சியினை எடுத் துக்காட்டும் தமிழ்மகளிரின் அன்புநிலைக் காட்சியினைக் கண்டோம.

கணவனே உயிரெனக்கொண்டு அவன்வழிப பணியாற்றி அளவிலா உவகையுடன் வாழ்ந்த தமிழ்மகளிர் கணவனை யிழந்து உயிர்வாழ்தல் வாழ்வாகாது எனக் கருதினர. கணவ னிறந்ததும அவன்வழித் தாமும் செல்வதே மேலென மதித் தனர. இராவணன் மனைவியான மண்டோதரியும இராவணன் இறந்தானெனக் கேட்டதும தானும அவன் செல்வுழிச் செல் லலே தகவுடையது—இன்பந தருவது என எண்ணுகிறுள. தலைவன் நிலை கண்டு தானும் உயிர் விடுகின்றுள். கணவனுடன் மாய்ந்த மண்டோதரியின் பெருமையினை,

"எர்தருமே முலகேத்த எவவுருவுந் தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் மண்டோதரிக்குப்
போருளின் பமளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரியவா யாற்குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்."

. என மணிவாசகரும் தமது குயிற்பத்தில் சிறப்பித்துப் பாடுவா ராயினர.

பூதப்பாண்டியன் இறந்தாணக அவன் மனைவி பெருங் கோபபெண்டு கணவனெடு உடன் உயிர்போக்க எண்ணுகிறாள். தானே நீங்கா உயிர்நிலைகண்டு தீப்பாயச் செலகின்றாள். அப் பொழுது அங்கு நின்ற பெரியோர்கள் அவளைத் தீப் புகாது தடுக்கின்றனர். அன்பு வழிபபட்ட அவதிநிலையில் நின்ற தேவி பெரியோகளை நோக்கி, "கணவனையிழந்த எனக்கு இனி இவ் வுலகு நல்லுலகாகாது. துன்பநிலையில் நிற்கின்ற எனக்குக் குளிர்ந்த தடாகமும துன்பஞ் செய்வதேயாகும். எனவே தடாகமும தீயும எனககு ஒரு தன்மையதே யாகும். இச் செயலிலிருந்து என்னை நீக்கல் எவாக்கும் முடியாத காரியம," எனக்கூறித் தீயிற பாய்ந்து உயிர விடுகின்றாள்.

"பல்சான் றீரே பல்சான் றீரே
செலகெனச சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழசசிப் பல்சான றீரே
.. . .
பெருங்காட்டுப் பணணிய கருங்கோட் டிமம்
நுமககரி தாகுக திலல வெமக்கெம
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழுவிழுந்த தாமரை
நள்ளிரும் பொயகையுந தீயுமோ ரற்றே"

என்ற புறப்பாட்டுச் செய்யுளில் சான்றோரின் விருப்பமும் பெருங்கோப் பெண்டின் அன்புநிலையும் காட்சியளிப்பதைக் காணலாம்.

கோவலனைக் கள்வனெனக் கூறிய பொற்கொல்லன் சொற் கேட்டு "கொன்றச் சிலமபு கொணர்க" எனக் கூறிக் கோவலன கொலைக்கு உறுதுணையாய்நின்ற நெடுஞ்செழியன், கண்ணகி சிலமபினையுடைதது அதன் பரலான மணிகாட்டியதும் நீதி வழியாண்ட பாண்டிய மன்னரின் உயாவுகுன்றக் காரணமான தானிழைத்த தவறினை உணாகின்றான், உடன் உயிர்விடுகிறான்; அதுகண்டு அன்பின் வழிவாழ்ந்த அவன் தேவியும உடன் உயிர் விடுகிறாள். இவ்வரலாற்றை,

மன்பதை காக்குந் தென்புலங காவல்
எனமுதற் பிழைதத தது கெடுகவென ஞயுளென
மனனன் மயங்கி வீழந்தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைநதனள் நடுஙகிக்
கணவனை யிழந்தோாக்குக் காட்டுவதில் லென்று
இணையடி தொழுது வீழந்தனளே மடமொழி"

என வழக்குரை காதையில் விளக்குகின்றார் இளங்கோவடிகள். கணவன் மாதவியின் பெண்மை நலம் விரும்பிப் பலகாலம்

தன்னை மறந்து வாழ்ந்தானையினுமை தானே அவனது பெருமையை விளங்கவைக்க வேணடுமெனை விருமபுகிறுள். மாண்ட கணவனுடல் கண்ட கண்ணகி தான கூறிய வருநினைத்திற்கினையய உயிர்பெற்று உடைபகர்ந்த கோவலனை உடல்விட்டு உயர்நெறியடைநததும் தானுமை தன் காதலனுடன் உடன்போதல் வேண்டுமெனை விருமபுகிறுள் தன் கணவன் களவனென்று பழிச்சொலலை உலகில் விடடுச் செலவது பெருமையாகாது. அவன் பெருமைனையை உலகறியக் காட்டி அவனை வழிச்செல்லலே தகவுடைமை என்ற அவளது அறிவுளளமை உடன்போகுமை ஆவலைத தடுக்கின்றது. மன்னனைக் கண்டு வழக்குரைதது கோவலன் மாண்பினை விளங்குவைததுக் கணவனிறநத பதினன் காம் நாள் கோவலனைக் கூடுகிறுள். கணவன் மாண்பை இலஙகவைதத கற்புடைப பதினி, இன்றும் நலவாழ்வு காட்டிய நஙகை எனப போற்றப்படுகின்றுள.

கண்ணகி கணவனுடன் விண்ணைடைநதாள என்ற வரலாற்றைக் கட்டுரை காதையில கூறிய இளங்கோவடிகள்,

“ மலைவேஙகை நறுநிழலின் வள்ளிபோல்வீர மனநடுங்க
முலையிழநது வநதுநின்றீர யாவிரோவென முனியாதே
மணமதுரையோ டரசுகேடுற வல்வினைவந் துருத்தகாலைக்
கணவனையஙகிழநது போந்த கடுவினையேன யானென்றுள்
என்றலும் இறைஞ்சியஞ்சி இணவலைக்கை எதிர்கூப்பி
நின்ற எல்லையுள் வானவரும் நெடுமாரி மலாபொழிநது
குன்றவருங் கண்டுநிற்பக கொழுநனைது கொணடுபோயினர்
இவளபோலும் நஙகுலககோர் இருந்தெய்வம் இல்லையாதலின்
சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
தெய்வங கொள்ளுமின் சிறுகுடி யீரே ”

எனக் குன்றக்குறவரின் வாய்மொழியில் வைத்துப் போற்றியமை கண்ணகியின் மாண்பினை விளக்கவேண்டுமென்ற ஆசிரியரின் பெருவிருப்பைப் புலப்படுத்துவதாகும்.

நாம், நமது இலக்கியச்செல்வங்கள் மூலம இங்குக் கண்ட காட்சிகள தமிழ்மகளிரின் வாழ்வின் குறிக்கோள் இன்னதென்பதனையும், கணவன் வழிநின்று அவன் பணிபுரிதலே மகளிர்க்கு இன்பந்தரும் வாழ்வாகும் எனப் போற்றின ரென்பதையும், கணவனில்லாது உயிர்வாழ்தல் வாழ்வாகாது எனக் கருதினரென்பதனையும், ஆடவர் புகழ்பெறுதற்கு மாண்புடை மனைவியரே காரணமாவ ரென்பதனையும் எடுத்தியம்பித் தமிழ்மகளிரின் மாட்சியை என்றும இலங்க வைப்பதைக் காணலாம்.

74. நக்கீரர் அடிநூல்

இப்பெயரையுடைய செய்யுளிலக்கண நூல் ஒன்று இருந்தது என்பது யாப்பருங்கல விருத்தியுரையினால் தெரிகிறது. யாப்பருங்கலம், செய்யுளியல் 40-ஆம் சூத்திர விருத்தியுரையில்,

ஐஞ்சீர் வெள்ளோயுட் புகாமை பெற்றுற் பெறுதுமெனின்,

'ஐஞ்சீர் அடுக்கலும் மணடில மாக்கலும்
வெணபா யாப்பிற் குரியவல்ல.'

என்று நக்கீரனார் அடிநூலுள் எடுத்தோதப்பட்டவையாற் பெறுதும.';

என்று உரையாசிரியர் எழுதுகிறார். மேலும், யாப்பருங்கலம், ஒழிபியலில விருத்தியுரைகாரர் இவ்வாறு எழுதுகிறார்.—

"தொல்காப்பியனர் நக்கீரர் மூதலாகவுள்ளார் ஒரு சாராசிரியர் ஆசிரியத்துள்ளும், கலியுளளும் ஐஞ்சீரடியும் அருகிவரப் பெறுமென்று.....காட்டுவாராகலினென்பது.

'ஐஞ்சீ ரடுக்கலு மண்டில மாககலும்
வெணபா யாப்பிற் குரிய வல்ல'

என நக்கீரர் நூலுள், 'வெண்பா யாப்பிற் குரியவல்ல' வென்றமையால், ஆசிரியதத்துககும கலிக்கும் ஐஞ்சீரடி புகுதலும, மண்டிலமாக்கலும உரித்தென்று விரிதுரைத்தார் எனக் கொள்க."

இவவாறு உரையாசிரியர் கூறுவதனால், நக்கீரர் அடி நூல் என்னும ஒரு செய்யுளிலக்கண நூல் இருந்ததென்பது தெரிகிறது. இநநூலைப் பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

இந்த அடிநூல் செய்த நக்கீரா சங்ககாலத்து நக்கீரரா அல்லது பிற்காலத்திலிருந்த வேறு ஒருவரா என்பது ஆராய்ச்சி செய்யற்பாலது.

75. நக்கீரர் நாலடி நானூறு

இப்பெயருடைய செய்யுளிலக்கணநூல் ஒன்று இருந்ததென்பது யாபபருங்கல விருத்தியுரையினால் தெரிகிறது. மேலே கூறப்பட்ட நக்கீரர் அடிநூலின் வேறானது. நக்கீரர் நாலடி

நானூறு என்னும் நூல், நக்கீரர் அடிநூலுக்குப் புறனடை நூலாக இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது.

யாப்பருங்கலம், செய்யுளியல் 4-ஆம் சூத்திர விருத்தியுரையில், வெண்பா இலக்கணத்தைத கூறுகிற இடத்தில் சில வெண்பாக்களை மேற்கோள காட்டிய விருத்தியுரைகாரர், "இந்நவை பிறவும், நக்கீரர் நாலடி நானூற்று வண்ணத்தால் வருவனவும் எல்லாம் தூங்கிசைச செபபலோசை" என்று எழுதுகிறார்

இதனால, நக்கீரர் நாலடி நானூறு எனனும் நூல், வெண்பா வினல் ஆன நானூறு பாக்களையுடைய நூல் என்பதும், அப் பாக்கள் வண்ணததினல தூங்கிசைச் செபபலோசையோடு அமைநதிருந்தன என்பதும் தெரிகினறன.

இந்நூலைப்பற்றி வேறு செய்திகள தெரியவில்லை

76 விளக்கத்தார் கூத்து

விளக்கத்தார் கூத்து என்னும் நாடகத் தமிழ நூலைப் பேராசிரியர் தமது உரையில் குறிபபிடுகிறார். தொலகாபபியம், பொருளதிகாரம செய்யுளியல்,

சேரி மொழியாற் செவவிதிற் கிளந்
தோதல் வேண்டாது குறிதது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந தோரே.

என்னும் சூததிரத்திறகுப் பேராசிரியர் இவ்வாறு உரை எழுதுகிறார் :—

"சேரிமொழி என்பது பாடிமாற்றங்கள். அவற்றினே செவ்விதாகக்கூறி ஆராய்ந்து காணுமைப் பொருட்டொடாடானே தொடுததுச் செயவது புலன் எனறு சொல்லுவர் புலனுணாந் தோர் என்றவாறு.

அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளா கிய வெண்டுறைச் செய்யுள் போல்வன வென்பது கண்டு கொள்க."

இதனல், விளக்கத்தார் என்னுமை புலவர் கூத்தநூல் ஒன்று செய்தார் என்பது தெரிகிறது.

இந்த விளக்கத்தார் என்பவர் விளக்கத்தனர் என்றும் கூறப்படுகிறார். இவர் செய்த "கெடலருந மாமுனிவர்" என்று தொடங்குமை கலிப்பாச் செய்யுளை இளம்பூரண அடிகளும் பேரா சிரியரும் தமது உரைகளில் மேற்கோள் காட்டுகிறார்கள். ஆனல், இச்செய்யுளை இயற்றிய ஆசிரியர் யார் என்று இவர்கள் கூற

வில்லை. யாப்பருங்கல விருத்தியுரைகாரர் இந்தச் செய்யுளை 30-ஆம் சூத்திரவுரையில மேற்கோள் காட்டி, 40-ஆம் சூத்திரவுரையில இதனை பாடியவர விளக்கத்தனர் என்று கூறுகிறார். அவர் எழுதுவது :

"அஃதேயெனின், விளக்கத்தனர் பாடிய கெடலரு மாமுனிவர் என்னும கலிப்பா புறநிலைவாழ்த்தாய் வந்தது பிறவெனின், அஃது ஆரிசியச் சுரிதகத்தான வந்தமையாற் குற்றமின்றெனக் கொள்க"

இதனால, விளக்கத்தார் கூத்து என்னும நூலை இயற்றிய வரும, கெடலருமாமுனிவர் என்னும் தொடக்கத்துப் பெருந தேவபாணிச செய்யுளை இயற்றியவரும விளக்கத்தனர் என்னும் புலவர என்பது தெரிகிறது. கெடலருமா முனிவர என்னும் அழகிய பெருந்தேவபாணிச் செய்யுள், இவர் இயற்றிய கூத்த நூலின ஒரு செய்யுள் எனறு கருதலாம. இந்தச் செய்யுளில் அச்சுதன எனனும் அரசன் கூறப்படுகிறான். இந்த அச்சுதன், அச்சுதவிக்கந்தன் என்று பௌத்தப் பாலிமொழி நூல்களில் கூறப்படுகிற களபர அரசனக இருக்கலாம். அப்படியானால் விளக்கத்தனரும கி. பி 450-இல் வாழ்ந்தவராதல் வேண்டும்.

77. சதகம்

இது கூத்து சம்பந்தமான ஒரு நாடகத் தமிழ்நூல். இந்த நூலை யாபபருங்கல உரையாசிரியர தமது உரையில் குறிப்பிடுகிறார். யாபபருங்கலம ஒழிபியலில் உரையாசிரியர இந் நூலை இவவாறு குறிபபிடுகிறார் :—

"வெண்டுறை வெண்டுறைப் பாட்டாவன : பதிணேராடற்கும ஏறறபாட்டு. அவை அல்லியம முதலியவும் பாடலகளாக ஆடுவாரையும், பாடலகளையும், கருவியையும் உந்து இசைப் பாட்டாய் வருவன..... ....

இனி இவற்றினுறுப்பு ஐமபத்து மூன்றுவன . அல்லிய உறுப்பு 6. கொடுகொட்டி யுறுப்பு 4. குடையுறுப்பு 4. குடதகினுறுபபு 5. பாண்டரங்க உறுபபு 6. மலாடனுறுப்பு 5. துடியாடனுறுப்பு 6. கடையத்துறுப்பு 6. பேட்டின் உறுப்பு 4. மரக்காலாடல் உறுப்பு 4. பாவையுறுபபு 3. என விவை. இவற்றின்றன்மை செயிற்றியமும, சந்தமும் பொய்கையார் நாலும் முதலியவற்றுட் காண்க. எண்டுரைப்பிற் பெருகும."

இதனால், சதகம் என்னும் இந்நூல, பதிணேராடற்குமேற்ற பாட்டுகளைக் கூறும் வெணடுறைப பாட்டுகளின இலக்கணங் களைக்கூறும் நூல என்பது தெரிகிறது.

இந்நூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

78. இராச இராசேசுவர நாடகம்

இராசராசன் (கி. பி. 985-1014) என்னும சோழ அரச னைப்பற்றிய ஒரு நாடக நூல் இது. இப்பெயருள்ள நாடக நூல் இருந்ததென்பது, இராசேந்திர சோழன் காலத்துச் சாசனம ஒன்றினால் தெரிகிறது. இந்த சாசனம், தென்னிந்திய சாச னங்கள, இரண்டாம் புத்தகம் 67-ஆம் எண்ணில் காணப படுகிறது (S. I. I. Vol II. No 67) இராச ராசேசுவர நாட கத்தைக குறிக்கிற இந்தச்சாசனப பகுதிகள வருமாறு :—

"உடையார ஸ்ரீ ராஜராஜஸ்வரமுடையார் கோயிலில ராஜராஜேஸ்வர நாடகமாட நித்த நெலவுதத்தாணியாக நிவந்தம செய்த நமவாய்க கேழவிபபடி- சாந்திக்கூத்தன் திருவாலன் திருமுது குனறுனை விஜயராஜேந்திர ஆசாரயனுக்கும இவன வர்க்கதாருக்கும காணிக்கையாகக குடுதோம்..... .. .. திருவாலந்திருமுது குன்றுனை விஜயராஜேந்திர ஆசாரியன் உடையார் வைகாசிப பெருவிழாவில ராஜராஜேஸ்வர நாடகமாட இவனுக்கும் இவன வர்க்கதாருக்கும காணிக்கையாகப பங்கு ஒன்றும ராஜகேசரியோடொக்கும ஆடவலானென்னும மாக காலால் நித்தநெல்லால தாணியாக நூறறிருபதின் கல நெலலும் ஆட்டாண்டுதோறும தேவர பண்டாரத்தேபெறச சந்திராதித்த வற் கலவெட்டித்து."

குறிப்பு (ஸ்ரீ ராஜராஜ விஜயம் என்னும பெயருள்ள நாடக நூல் ஒன்றை, சவர்ணன நாரணபட்டாதிதன் என்பவன் இயற்றினன் என்று திருபபூந்துருத்தி சாசனம் ஒன்று கூறு கிறது. (Annual Rep. S I Epigraphy 1930-31.) ஆனல், இது வடமொழி நூல என்று தெரிகிறது இந்நூலும இப போது கிடைக்கவில்லை.)

79. வல்லியந்தாதி

வல்லி என்பது வல்லம் என்னும் ஊர். இது, வடஆர்க்காடு ஜில்லா குடியாத்தம் தாலுகாவில் உள்ளது. திருவல்லம் என்னும் இவவூரில் பில்வநாதேசுவரர் என்னும் பெயருள்ள சிவன் கோயில் உண்டு. இச் சிவபெருமான் மீது பாடப்பட்டது வல்லியந்தாதி. இந் நூல இயற்றியவர், குறட்டி வரதையன் என்பவர். வல்லியந்தாதி இயற்றிய குறட்டி வரதையனுக்கு இக் கோயில் அதிகாரிகள் 100 குழி நிலததை (தீக்காவெல்லம என்னும் ஊரில் உளது) பரிசு அளித்தனர். (M. E. R. 293 of 1921.) இநதால் இப்போது கிடைக்கவில்லை.

80. கையனா யாப்பியல்

கையனார் எனனும் பெயருள்ள ஆசிரியரை, யாப்பருங்கலக் காரிகை யுரையாசிரியராகிய குணசாகரரும், யாப்பருங்கல உரை யாசிரியரும் தமது உரைகளில் குறிப்பிடுகிறார்கள். இவர்கள் கூறுவதிலிருந்து கையனார் என்பவர் யாப்பிலக்கண நூல் ஒன்று செய்திருக்கிறார் என்பது தெரிகிறது. ஆனால், அந்த இலக்கண நூலின் பெயர் என்னவென்று தெரியவில்லை. இந்த உரை யாசிரியர்கள், கையனார் என்னும் ஆசிரியரின் பெயரைமட்டும் கூறினரேயன்றி அந் நூலின் பெயரைக் கூறவில்லை.

குணசாகரர், கையனார் நூலைப்பற்றி (யாப்பருங்கலக் காரிகை. 40-ஆம் காரிகை யுரையில்) எழுதுவது இது :

"முதலயற் சீர்க்கண் இல்லாததனைக் கீழ்க்கதுவாய் என் றும ஈறுயற் சீர்க்கண இல்லாததனை மேற்கதுவாய் என்றும் வேண்டினர் கையனார் முதலாய ஒருசார் ஆசிரியா என்பது அறி விதற்கு, 'மைதீர் கதுவாய்,' என்று விதப்புரைத்தாரெனக் கொளக."

"இயைபுத் தொடைக்கு ஏழு விகற்பமும் இறுதிச்சீர் முதலாகக் காட்டினர் கையனார் முதலாகிய ஒருசார் ஆசிரிய ரெனக் கொளக."

யாப்பருங்கலக் காரிகை 41-ஆம் காரிகை யுரையில் குண சாகரர், கையனார் நூலிலிருந்து ஒரு செய்யுளை உயிர் எதுகைக்கு மேற்கோள் காட்டுகிறார். அது வருமாறு :—

"தளியொடு மயங்கிய தாங்கிரு ணீடுநாள்
அணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி
வடியமை யெஃகம வலவயி னேந்திக்
கனியே வருதி நீயெனின்
மையிருங கூந்த லுயதலோ வரிதே."

இஃது இரண்டாமெழுத் தொன்றுதாயினும இரண்டா மெழுத்தின்மே லேறிய உயிர் ஒன்றி வந்தமையால் உயி ரெதுகை. இது கையனார் காட்டிய பாட்டு.

யாப்பருங்கல விருத்தியுரைகாரா கையனாரைப்பற்றி இவ்வாறு எழுதுகிறார் :—

"அஃது சிறுபறறி யறியுந் தன்மைத்தாகலின், இயைபுத் தொடைக் கிவ்வா றெட்டு விகறபமும சொன்னார் கையனார் தொல்காப்பியனார் முதலாகிய ஒரு சாராசிரியர்."

(யாப்பருங்கலம் : தொடையோத்து 34-ஆம் சூத்திர உரை.)

கடையிணை முரண், பின்முரண், இடைப்புணர் முரண், தொடையிலக்கணத்திற்கு உதாரணமாகச் சில செய்யுள்களை மேற்கோள காட்டிய பிறகு யாபபருங்கல விருத்தியுரைகாரா "இவ்வாறு கூறினா கையனா என்னும ஆசிரியரென கொளக," என்று எழுதுகிறார்.

(யாப்பருங்கலம். தொடையோதது. 31-ஆம் சூத்திர உரை.)

"இனமோனை மூன்று வகைப்படும். அவை வல்லின மோனையும் மெல்லின மோனையும இடையின மோனையுமாம். அவற்றுள வல்லின மோனை வருமாறு .

'கயலே ருண்கண கலுழ நாளுஞ்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத
திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் வாழி யைய பூதத
கொழுங்கொடி யணிமலா தயங்கப்
பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே'

இஃதெல்லா வடியு முதற்கண் வல்லினமே வருதலையின் வல்லின மோனை யெனறு கையனர் காட்டிய பாட்டு"

(யாப்பருங்கலம், தொடையோத்து உரை)

கையனர் முதலாகிய வொருசாராசிரியர் இரண்டாஞ் சீர்க்க ணிலலாததனைக் கீழ்க்கதுவா யென்றும, சாற்றயற சீர்க்க ணில்லாததனை மேற்கதுவா யென்றும வழங்கியதறிவித்தற் கொரு தோற்ற முணாததியதனக கொள்க."

(யாப்பருங்கலம; தொடையோதது 47-ஆம் சூத்திர உரை.)

"இவவாறு வண்ண விகற்ப மெடுத்தோதினா தொல்காப பியனரும் கையனரு முதலாக உடையா."

(யாப்பருங்கலம்; ஓழிபியல் உரை.)

இவ்வாறு இவ் வுரையாசிரியாகள எழுதுவதிலிருந்து கையனர் என்னும் ஆசிரியர் இயறறிய யாப்பிலக்கண நூல ஒன்று இருந்ததென்பது ஐயமறற தெரிகிறது. கையனர் யாப் பிலக்கண நூலிலிருந்து இவ் வுரையாசிரியாகள் மூனறு சூத்தி ரங்களை மேற்கோள் காட்டி யிருக்கிறார்கள். அவை வருமாறு:—

"இறுவா யொப்பினஃ தியைபென மொழிப"

(யாப்பருங்கலக் காரிகை 17. உரை மேற்கோள்.)

"உறுப்பி னளவே யொன்றரை யாகும."

"ஆய்தந தானே குறியதன் கீழுத்தாய்
வலியதன் மேல்வந் தியலு மென்ப."

(யாப்பருங்கலம்: எழுததோத்து. 2-ஆம் சூத்திரஉரை மேற்கோள்.)

இவையன்றி, கையனுரைப்பற்றியும் அவர் இயற்றிய யாப் பிலக்கண நூலைப்பற்றியும் வேறு செய்திகள் தெரியவில்லை.

81. நத்தத்தனா இயற்றிய நத்தத்தம்

நத்தத்தனர் என்னும் பெயருள்ள புலவர் ஒருவர் தம் பெயரால் நதத்தம் என்னும் யாபபிலக்கண நூல் ஒன்றைச் செய்தா என்பது, யா காரிகை யுரையாசிரியர் குணசாகரரும் யாப்பருங்கல விருததி யுரைகாரரும் தம உரைகளில் கூறு வதிலிருநது தெரிகிறது. 'ந' என்னும சிறபபெழுததோடு இவர் பெயர் வழங்கப்படுவதனல் இவர் புலவர்களால் பெரிதும் மதிக் கப்பட்டவர் என்பது தெரிகிறது இவா பெயா சில சமயங களில் நற்றத்தனர் எனறும் கூறப்படுகிறது. இவர் இயற் றிய நத்தத்தம் என்னும் நூலுக்கு அடிநூல் என்னும பெயரும் வழங்கியதுபோலும. எனனை?

"ஐஞ்சீ ரடுக்கலு மண்டில மாக்கலும்
வெண்பா யாப்பிற் குரிய வல்ல

என்று நத்ததனர் அடிநூலுள் எடுத்தோதினர்"
என்று உரையாசிரியா குணசாகரர் (யா. காரிகை. 39 உரை.) கூறுவது காணக. மேலும, குணசாகரா, நததத்தனர் நூலைப் பற்றி (25-ஆம் காரிகையுரை) இவ்வாறு கூறுகிறார் —

"மாவாழ் சுரம் புலிவாழ் சுரம எனனும் வஞசியுரிச்சீ ரிரண்டும உளவாக வைதது, ஒரு பயனேகதத தூஉமணி கெழூஉமணி என்றளபெடுத்து நேர்நடுவாகிய வஞ்சியுரிச் சீரகசு உதாரணம எடுத்துக் காட்டினா நத்தத்தனர் முதலாகிய ஒருசா ராசிரியா"

நத்தத்த நூலிலிருநது குணசாகரர் கீழ்க்கண்ட சூத்திரங் களைத் தமது உரையில் மேறகோள் காட்டியுளளார் —

"அளபெடைத் தொடைக்கே யளபெடை யொன்றும்"
"வெண்பா விரவினுங கடிவரை யின்மே றை." 1

"ஐஞ்சீ ரடுக்கலு மண்டில மாக்கலும்
வெண்பா யாப்பிற குரிய வல்ல" 2

யாபபருஙகலக் காரிகை யுரையாசிரியர் கீழ்க்கணட நத்தத் தச் சூத்திரஙகளைத தமது உரையில் மேற்கோள காட்டுகிறார்.—

"யாப்பெனப் படுவ தியாதென வினவிற்
றூக்குந தொடையு மடியுமிம் மூனறு
நோக்கிற் றென்ப நுணஙகி யோரே." 1
'பாவென மொழியினுந் தூக்கின் பெயரே." 2

"தனி நெடி றனிக்குறி லொற்றொடு வருதலென்
றன்னல் வகைத்தே நேரசை யென்ப." 3
"குறிவிணை குறினெடி லொற்றொடு வருதலென்
றந்நால வகைத்தே நிரையசை யென்ப." 4
"நேரீற் றியற்சீர் கலிவயி னிலவே
வஞ்சி மருங்கினு மிறுதியி னிலவே." 5
"நாற்சீர் கொண்டது நேரடி யளவென்ப
தூக்கொடுந் தொடையொடுஞ் சிவணு மென்ப" 6
"ஆசிரி யப்பா வெண்பாக் கலியென
மூவகைப் பாவு நேரடிக் குரிய." 7
"வஞ்சி விரவினு மாசிரிய மூரித்தே
வெண்பா விரவினுங கலிவஞ்சி வின்றே" 8
"ஆசிரியப் பாவின் சிறுமைக் கெல்லை
மூவடி யாகும் பெருமை யாயிரம்
நாலடி முதலா வொன்று தலைசிறந
தேழடி காறும் மெண்பாட் டுரிய
வாயுறை வாழுதே செவியறி வுறூஉவே
கைக்கிளை மயக்கங கலிவெண் பாட்டே
தத்தங குறிப்பின வளவென மொழிப." 9
"முதலெழுத் தொன்றின் மோனை யாகு
மஃதொழித் தொன்றி னெதுகை யாகு
மாயிரு தொடைக்குங கிளையெழுத் துரிய." 10
"பொருளினு மொழியினு முரணுதன் முரணே." 11
"இருசீ ரொன்றி னியையெனப் படுமே." 12
"அளவெடைத் தொடைக்கே யளவெடை யொன்றும்." 13
"ஒன்று தாவது செந்தொடைக் கியலே." 14
"சீர்முழு தொன்றி னிரட்டை யாகும்." 15
"முதற்சீர்த் தோற்ற மல்ல தினை
விகற்பங கொள்ளா ரடியிறந் துரினே." 16
"ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகக் கலியொடு கலிமூன் றுரும்." 17
"உரையு நூலு மடியின்றி நடிப்பினும்
வரைவில வென்ப வயங்கி யோரே." 18
"வாயமொழி பிரியே முதுசொல் லென்றிங
காமுரை மூன்று மன்ன வென்ப." 19
"தானே யடிமுதற் பொருள்பெற வருவது
கடனென மொழிப குறியுணாந் தோரே."

"வஞ்சி யாயி னிறுதியும் வரையார்." 20
"கலிததுவை யடிவயி னேரீற் றியற்சீர்
நிலைக்குரித தன்றே தெரியு மோர்க்கே
வஞ்சி மருங்கினு மிறுதி நில்லா." 21
"குன்றியுந் தோன்றியும் பிறிது பிறிதாகியும்
ஒன்றிய மருங்கினு மொருபுடை மகார
மரையுரு சீரு மடியு மெல்லாம்
வகையுளி சேர்ததல் வல்லோர் மேற்றே." 22
"சீரா கிடனு முரியசை யுடைய
நேரீற் றியறசீ ரவவயி னனை." 23

82. சேயூர் முருகன் உலா

சேயூர முருகப்பெருமான்மீது கவிராசர் என்பவர் இயற்றிய ஒரு உலா உண்டென்பது, அந்தகககவி வீராகவ முதலியார் இயற்றிய சேயூர முருகன் பிள்ளைத்தமிழினால் தெரிகிறது. அந்தகககவி வீராராகவ முதலியார தாம இயற்றிய சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், அமபுலிப்பருவம் 10-ஆம செய்யுளில் இந்நூலைக் குறிபபிடுகிறார். அச்செய்யுள் இது :—

"கவிராத வெவவினை தவிர்கரு முறுகாறுந்
தரித்தா றெழுத் தோதலாஞ்
சந்நிதிக கருணைகிரி நாதன் திருப்புகழ்ச
சந்தம் புகழுந துயயலாம்
புவிராசன வளவன் கழுக்குன்றன் வளமைபுரி
புண்ணியந் தரிசிக கலாம்
பொருஞ்சூ ரனைப்பொருங் கதைமுதற் கந்தப்
புராணக கடற் காணலாம்
கவிராச னிப்பிரான் மிசைசெயத திருவுலாக்
கவிவெள்ளை கற்றுருகலாம்
கவிவீர ராகவன் சொற்றபிள் ளைக்கவி
கலம்பகக் கவி வினவலாம்
அவிராடகக் கோவில் புக்குவிளை யாடலாம்
அம்புலீ யாட வாவே
மயில்வனச செய்கையின் மயில்வகைக் கந்தனுடன்
அம்புலீ யாட வாவே."

இச்செய்யுள், கவிராசன என்னும் புலவா சேயூர் முருகன் உலா என்னும் நூலை இயற்றிய செய்தியைக் கூறுகிறது. கவிராசன் என்பவர், சேரைக் கவிராசபிள்ளை என்பவர். ஆசுகவிராயர் என்னும் சிறப்புப் பெயரையும உடையவர். சுன்னாகம்

திரு. அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் தாம் இயற்றிய தமிழ்ப் புலவர் சரித்திரத்தில் இவரைப்பற்றி இவ்வாறு எழுதுகிறார்:

"சேறைக் கவிர்ச்சபிள்ளை. இவரூர் சோழ மண்டலத்துள்ள சேறை என்றும், குலம் கருணீகர் குலம் எனறும் கூறுவர். சமயம் சைவம். இவர இலக்கிய இலக்கணங்கள் நன்கு கற்றவர. ஆசுகவிராயர் என்னும் பேரும் பெற்றவர. சேயூர் முருகனுலா, வாட்போக்கிநாதருலா, அண்ணுமலையார வண்ணம், காளத்திநாதருலா முதலிய பிரபந்தங்கள செய்தவர், இப்பிரபந்தங்கள் சிலவற்றிலே சிலேடை, மடக்கு, திருக்கு முதலிய அணிகளையும் அமைத்தவர்."

சேயூர் முருகன உலா இப்போது மறைந்துவிட்டதாகத் தெரிகிறது இந்நூல் கி பி. 17-ஆம நூற்றாண்டில் இயற்றப் பட்டிருக்கக்கூடும என்று தோன்றுகிறது.

83. பேர் வஞ்சி

புதுக்கோட்டை திருமய்யம் தாலுகா பொன்னமராபதி என்னும் ஊரில் உள்ள சுந்தராசப்பெருமாள் கோவில சாசனமொன்று பேர்வஞ்சி என்னும் நூலைக் குறிப்பிடுகிறது. மறமாணிக்கர் என்னும் வீரர்களின சிறப்பை, திருவரங்குளமுடையான் என்னும புலவர் பேர்வஞ்சி என்னும் நூலை பாடினர் என்றும், அந்நூலை அரங்கேற்றக்கேட்டு மகிழ்ந்த அந்த வீரர்கள் இப்புலவருக்கு மறச்சக்கரவர்த்திபபிள்ளை என்னும சிறப்புப் பெயரைக் கொடுத்துத் தூத்துக்குடியில் நனசெய புன்செய் நிலங்களைப் பரிசிலாக வழங்கினார்கள் என்றும் அந்தச் சாசனம் கூறுகிறது. அந்தச் சாசனத்தின் வாசகம் இது :—

"ஸ்வஸ்திஸ்ரீ சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு பதினென்றுவது னெதிராமாண்டு. புறமலை நாட்டுப பொன்னமராபதி முதலான நாடுகளில் மறமாணிக்கரோம் பேர்வஞ்சி கேட்டுப் பரிசிலாக குடுத்த (வந்) திருவரங்குள முடையாணுக்கு மறச்சக்கரவர்த்திப பிள்ளையென்று பேருங் குடுத்து தூத்திக்குடி வயலில் வடபாகம் விளைநிலமும இதுக் கெல்லையான புன்செய்களும் முன்பு எழுதி அணிதது குடுத்த .....சந்திராதித்தவரை இறையிலியே காணிக்கையாகக் குடுத்தோம்.

.....இதில் தூத்திக்குடியில் நன்செய் புன்செய் உள்ளவை அடங்கலும் தேவன் திருவரங்குளமுடையாணை மறச்சக்கரவர்த்திய பிள்ளைக்கு நன்செய் புன்செய் பாதியும் தமிழரையருள்ளிட்ட நால்வர்க்குப் பாதியுமாக இட்டோம்.

.....(*Inscriptions (Texts) of the Pudukkottai State No. 278.)

இந்தச் சாசனத்தில் கூறப்படுகிற சோணாடு வழங்கிய சுந்தரபாண்டிய தேவர் என்னும் பாண்டியன் கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆசாண்டவன்.

இந்த பாண்டியனுடைய படையின் ஒரு பகுதியைச் சேர்ந்தவர் மறமாணிக்கம் என்று கூறப்படுபவர். இவாகளுடைய வீரத்தையும் வெற்றியையுங் கூறுவது போவஞ்சி என்னும நூல். போர்வஞ்சி எனினும் பெருவஞ்சி எனினும ஒக்கும.

போர்வஞ்சி பாடிய புலவருக்குத் தேவன் திருவாங்குள முடையான் என்னும் பெயர் இருபபதனாலும், மறச்சக்காவர்த்தியபிள்ளை என்னும் சிறப்புப் பெயர் சூட்டப்பட்டபடியாலும் இவா மறவர் இனத்தைச் சேர்ந்தவர் என்று கருதலாம.

போர்வஞ்சியில் சரித்திர சம்பந்தமான செய்திகளும் இருக்கக்கூடும். இந்நூல் இப்போது கிடைக்கவில்லை

84 பன்னிருபடலம்

புறப்பொருள இலக்கணதததக கூறுகிற பன்னிருபடலம் என்னும் பெயருளள நூலொன்று இருந்ததென்பது பேராசிரியா, இளம்பூரண அடிகள், நசசினாக்கினியா, யாப்பருங்கல விருததியுரைகாரா, இறையனா அகபபொருள் உரையாசிரியர் ஆகியோர் உரைகளினால் தெரிகிறது.

"அளவிறற் பெயர் பெறறது பன்னிருபடலம" என்று கூறுகிறா இறையனா அகப்பொருள் உரையாசிரியா.

"ஓதறிறை பிணடமாயிற்று பன்னிருபடலம்" என்று கூறுகிறா இளம்பூரண அடிகள. (தொல: பொருள செய்யுள். 165-ஆம் சூத்திர உரை.)

இடைக்காலத்திலே பெரிதும் பயிலப்பட்டது பன்னிருபடலம் என்பது நன்கு தெரிகிறது. இநநூலைப் பின்பறறி, இதற்கு வழிநூலாகப் புறபபொருள் வெண்பாமாலை என்னும் நூலை ஐயன ஆரிதன் என்பவர் இயற்றினா, "பன்னிருபடலம் முதல நூலாக வழிநூல செய்த வெண்பாமாலை ஐயனாரிதனாரும் இது கூறினா" என்று பேராசிரியா (தொல: பொருள். மரபு.) தமது உரையில் எழுதுகிறார்.

பன்னிருபடலத்தின் வழிநூலாகிய புறப்பொருள் வெண்பாமாலை இப்போது முழுவதுமம இருக்கிறது. ஆனால், மூதனூலாகிய பன்னிருபடலம் மறைந்துவிட்டது.

அகத்திய முனிவரின் மாணவர் பன்னிருவரும் சேர்ந்து புறப்பொருள் இலக்கணம பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு படலம் இயற்றினர்கள் என்றும, அவாகள் இயறறிய பனனிரு படலங்களின் தொகுப்பே பன்னிருபடலம் என்னும் பெயர் பெற்ற நூலாயிற்று என்றும் கூறுவர். என்னை ?

“ மன்னிய சிறப்பின் வாலேர் வேண்டத
தென்மலை யிருந்த சீர்சான் முனிவான்
றன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்திய தொல்காப்பியன் முதற்
பனனிரு புலவரும் பாஙகுறப் பகாந்த
பன்னிரு படலம் ”

என்று புறப்பொருள வெண்பா மாலைப் பாயிரம் கூறுவது காண்க.

பன்னிரு படலத்துச் சூத்திரம ஒன்றினை இளமபூரண அடிகள் (தொல் புறததிணை ‘ அறுவகைப்பட்ட பார்ப்பன பக்கமும் ” என்னும சூததிர உரையில்) மேற்கோள் காட்டுகிறார். அச்சூத்திரம இது —

“ பனியும் வெயிலும் கூதிரும் யாவும்
துனியின் கொள்கையொடு தொன்மை யெய்திய
தணிவுற் றறிந்த கணிவன் முல்லை ”

நச்சிணாகனியர், சிந்தாமணி (கோவிந்தையார் 20) உரையில்,

“ பல்லாக கொண்டாரா ஒலலா ரென்னும்
பூசல் கேட்டு கையது மாற்றி ”

என்னும் பன்னிருபடலச் சூதிரதனை மேற்கோள் காட்டுகிறர்

யாப்பருங்கல விருத்தியுரைகாரர், கீழ்க்கண்ட பன்னிரு படலச் சூத்திரங்களைத் தமது உரையில் மேற்கோள் காட்டுகிறர் .—

“ அகததிணை யகவலுள் வருஞி வாரா. என்னை ?

‘ அகத்திணை மருஙகி னளவு மயஙகி
விதப்ப மற்றவை வேறு வேண்டி
வஞ்சி யடியின யாததிலர் வருஞி
யகததிணை மருஙகி னணையு மாறே ’

என்பது பன்னிருபடலத்துப் பெருந்திணைச் சூத்திரமாகலின் ”

(யாப்பருங்கலம் : அடியோதது)

"'ஆய வகப்புற மையிரண்டு மாயுங்காற்
காந்த ளமர்ந்த வீரைஞது மகதத்தின் புறமே."
'கைக்கிளை யென்பது புறனே'
இவை பன்னிரு படலம்."
(யாப்பருங்கலம் ஒழிபியல்.)

"'பொருதல தும்பை புணாவ தென்ப'
இவற்றின் விகற்பமெல்லாம் பன்னிருபடலத்துட் காண்க."
(யாப்பருங்கலம : ஒழிபியல்.)

இளம்பூரண அடிகள கீழ்க்கண்ட பன்னிருபடலச் சூத்திரத்தைத் தமது உரையில் (தொல · பொருளாதிகாரம்) மேற்கோள் காட்டுகிறார. அச்சூத்திரம் இது :

"தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்
றன்ன விரு வகைத்தே வெட்சி."

பன்னிரு படலத்திலே தொல்காப்பியர் இயற்றியதாகக் கூறப்படுகிற சூத்திரங்கள உண்மையில் தொலகாப்பியா இயற்றியன அல்ல என்று இளமபூரண அடிகள மறுகிறார் ஏனென்றால், தொல்காப்பியப பொருளதிகாரதில் தொல்காப்பியர் கூறியுள்ள கருத்துக்களுக்கு மாறுபட்ட கருதகுகள், பன்னிரு படலத்தில் தொல்காப்பியர் இயறறியதாக கூறபபடுகிற சூத்திரங்களில் காணப்படுகின்றன என்பதைச சுட்டிக் காட்டுகிறார். அவா எழுதுவது வருமாறு :—

"பன்னிருபடலத்துள்,
'தனனுறு தொழிலே வேந்துறு தொழிலென்
றன்ன விரு வகைத்தே வெட்சி'
என, இரண்டு கூறுபடக் கூறினராயினும, முன்வருகின்ற வஞ்சி, உழிஞை, தும்பை முதலாயின எடுததுச செலவு, எயிலகாத்தல், போர் செய்தல் என்பன அரசாமேல் இயன்று வருதலின் வேந்துறு தொழில் ஒழித்து, தன்னுறு தொழிலெனத தன் நாட்டும் பிறர் நாட்டுமக களவின் ஆன்றிரை கோடலின் இவர் அரசரது ஆணையை நீங்கினராவர். ஆதலால, அவ்வாறு கூறல் மிகைபடக் கூறலாம். அதனல், பன்னிருபடலத்துள் வெட்சிப்படலம் தொல்காப்பியர் கூறினரென்றல் பொருந்தாது. எனனை ?

'ஒத்த சூதிர முரைப்பிற் காண்டிகை
மெய்படக் கிளந்த வகைய தாகி
ாரைங் குற்றமு மின்றி நேரிதின்
முப்பத திருவகை யுததியொடு புணரின்
நூவென மொழிப நுணஙகுமொழிப் புலவர் !
(தொல் : பொருள் : மரபு.)

எனவும்,

‘சிதைவெனப் படுமவை வசையற நாடின்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
குனறக கூறல் மிகைபடக் கூறல்
பொருளில கூறல் மயங்கக் கூறல்
கேட்டோர்க் கின்ன யாப்பிற் றுதல்
பழிதத மொழியா னிழுக்கக் கூறல
தன்ன வெருபொருள் கருதிக் கூறல்
என்ன வகையினு மனங்கோ ளின்மை
அன்ன பிறவு மவற்றுவிரி வாகும்.’

(தொல்: பொருள் · மரபு.)

எனவும் கூறிய ஆசிரியர் தாமே மாறுகொளக் கூறல, குனறக் கூறல், மிகைபடக் கூறல், பொருளில கூறல், மயங்கக் கூறல், தன்னெனரு பொருள் கருதிக் கூறல் என்னும் குற்றம் பயப்பக் கூறினரென வருமாகலான.”

(தொல்: பொருள்: புறதிணை ‘வேந்து விடு முனை’ என்னும் சூத்திர உரை.)

தொலகாப்பியத்துக்கு மாறுபட்ட கருததுக்களையுடைய சூதிரங்கள் பனினிருபடலதது கூறப்பட்டுள்ளதை இளம் பூரண அடிகள் எடுதது க்காட்டி, அப பனினிருபடலச சூத்திரங்கள் தொல்காப்பியரால இயற்றப்பட்டன அல்ல என்பதை மேலுமம விளகுகிறார் —

“பன்னிருபடலத்துள் காந்தைக்கண் புணவெணடு வருதல் முதலாக வேறுபடச சில துறை கூறினராகலின், புண்படுதல் மாற்றோர் செய்த மறத்துறையாகலின், அஃது இவர்க்கு (தொல் காபபியாக்கு) மாறுகக் கூறலும் மயங்கக் கூறலுமாம். ஏனையவும் இவ்வாறு மயங்கக் கூறலும் மிகைபடக் கூறலும் ஆயவாறு எடுத்துக் காட்டின் பெருகுமாதலான் உய்த்துணர்ந்து கண்டு கொள்க.”

(தொல்: புறதிணையியல். ‘வெறியறி சிறப்பின்’ என்னும் சூத்திர உரை)

இதனால், சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்திலே, சிலர் புதுவகையால் சில சூதிரங்களைச் செய்து அவற்றைத் தொல் காப்பியர் முதலிய பன்னிருவர் பெயரால் பன்னிரு படலம் எனறு பெயரிட்டு அமைததுக்கொணட நூல் பன்னிரு படலம் என்பது தெரிகிறது. ஆனால், இந்நூல் இடைக்காலத்திலே பெரிதும் பயிலப்பட்டது என்பதும் தெரிகிறது. இப்போது இந்நூல் மறைந்துவிட்டது. இதன் வழிநூலாகிய புறப் பொருள் வெண்பாமாலை இபபோது வழங்கிவருகிறது.

(தொடரும்)

வாழ்வின் கடைக்கோட் காலம்

[வித்துவான் திரு. செ. வேங்கடராமச் செட்டியார்]

இளமையும் எழிலும் வளமையுமுடைய தலைவனும் தலை
வியும் தமரறியாது தாமே தம்மில் கண்டு காதல்கொண்டு
ஒழுகும் களவொழுக்கத்தைப் பற்றியும பின்னர்ப் பல்லோரறிய
மணமுரசறைந்து தமர்தரத் தலைவியைத் தலைவன் ஏற்றுக்
கொண்டு நிகழ்த்தும கற்பொழுக்கத்தைப் பற்றியும் விரித்துக்
கூறும் நூல்கள் மிகப்பல தமிழில் உண்டு. அவை யாவும காத
லர்களின இளமைக் கால வாழ்க்கையைப் பற்றியே விரித்துக்
கூறுவனவன்றி அவர்களுடைய முதுமைக் கால வாழ்க்கையைப்
பற்றிக் கூறுவனவல்ல காரணம, இளமைக்கால வாழ்க்கை
போல முதுமை வாழ்க்கை மக்கள் உள்ளதைக் கவராமையே
யாகும். இனபம் என்பது எல்லாவுயிர்க்கும் மகிழ்ச்சிதரக்கூடிய
தாகலின் பொதுமக்கள் உள்ளம், இன்பம நிறைந்த இளமை
வாழ்கைகையையே அறிய விழைகின்றது. பொதுமகக்ள் உளளம்
எதை விரும்புகின்றதோ அதைத் தம்புலமை தோன்ற விரித்துக்
கூறுவதையே புலவர்களும் விரும்புகின்றனர். எனவே இன்ப
நுகர்ச்சிக்குரிய காதலரின் இளமை வாழ்க்கையை விரிக்கும்
நூல்கள் பெருகின.

அங்ஙனமாயின், காதலராயில்லிருந்து நல்லறஞ் செய்து
முதிர்ந்தவர் வாழ்க்கை பயனற்றதோ வெனின? பயனற்ற
தன்று. அறிவும் பண்பும் அநுபவமும் முதிரப்பெறுத இளமை
வாழ்க்கையைவிட அவை முதிரப்பெற்ற முதுமை வாழ்க்கையே
மிகப் பயனுடையதாகும். ஆயின் மக்கள உள்ளம் இன்பத்
தையே நோக்குவதன்றிப் பயனை நோக்குவதில்லையே. எனவே,
பயன் மிக்கதாயினும் காதலர்களின் முதுமைவாழ்க்கை நூல்
களில் விரித்துக் கூறப்படவில்லை ஆயினும், முதுமை வாழ்க்
கையின் சிறப்புணர்ந்த ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர்,
அதற்கு இலக்கணம் கூறியுள்ளார். மக்கள் வாழ்க்கை முழுவ
தையும் ஆராய்ந்து கூறும் தம் பொருளதிகாரத்துக் கற்பியலின்
இறுதியில், காதலராய் வாழ்ந்து முதிர்ந்தோர எவ்வாறு
வாழ்க்கை நடத்தவேண்டும் என்பதைக் கூறியுள்ளார், அதைக்
காண்போம்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே." (கற்பியல்: நிக)

என்பது அச்சூத்திரம். தொல்காப்பியம் முழுமைக்கும் உரை வகுத்த இளம்பூரணர், பொருளதிகாரத்து முன்னுரையில் இச்சூத்திரத்தை யெடுத்துக் காட்டி "என, இலக்கணத்தோர் இயலபும்" என வகுத்துள்ளார். கற்பியலில் இச்சூத்திரத்தை விளக்கவந்த அவர், இது தலைவற்கும் தலைவிக்குமாவதோர் மரபுணர்த்திற்று சிறந்தது பயிற்றலாவது - அறத்தின்மேல் மனநிகழ்ச்சி என்று கருத்து வகுத்து, "சூத்திரத்தால பொருள் விளங்கும" என்று கூறிப போந்தார.

நச்சினார்க்கினியர், "இது முன்னா இல்லறம் நிகழ்த்திய தலைவனும் தலைவியும் பின்னர்த் துறவறம நிகழ்த்தி வீடுபெறுப என்கின்றது." எனறு கூறிப்பின் விளக்குகின்றார்

"தலைவனும் தலைவியும் உரிமைச சுற்றதோடே கூடி நின்று இல்லறஞ செய்தலை விரும்பிய மக்களோடே தமக்கு முன்னரமைந்த காமதத்தினையும் தீதாக உட்கொண்ட காலத்திலே அறம பொருளினபதத்திற் சிறந்த வீட்டின்பம பெறுதற்கு ஏமஞ்சானறவற்றை யடிப்படுதல் யான முறகூறிய இல்லறத்தின் பயன் என்றவாறு.

"சான்றகாமம்" எனறார நகர்ச்சியெலலாம் முடிந்தமை தோன்ற. இது கடையாயினார நிற்கும் நிலையென்றுரைத்தற்குக் 'கடை' என்றார. ஏமஞ்சான்ற ஆவன —வானபபிரத்தமும சந்நியாசமும; எனவே இலறதனை பினனர் இவறறின கண்ணே நின்று, பின்னர மெயயுணர்ந்து வீடுபெறுப என்றார. இவ்வீடுபேற்றினை இன்றி அமையாது இவ்வில்லறம என்பது இதன் பயன் இது காஞ்சியாகாதோ வெனின்? ஆகாது; தங் குறிப்பினன் அன்றி நிலையாமைதானே வருவதுதான் சிறந்து நிலைபெற்று நிற்குமெனச் சானறோர கூறுதலும், அது தானே வந்து நிற்றலுங காஞ்சி; இஃதனனதனறிச் சிறந்த வீட்டின்ப வேட்கையால் தாமே எல்லாவற்றையும் பற்றறத் துறத்தலின் அகப்பொருட்பகுதியாம். இதனானே இவ்வோதத்திலும் பல வழியுங் கூறிய காமம் நிலையின்மையின்மேல் இன்பத்தை விளைதலே வருதலிற் காஞ்சியாகாமை யுணர்க.

உ-ம். "அரும்பெறற் கற்பி னயிராணி யன்ன
பெரும்பெயாப் பெண்டி ரெனினும்—விரும்பிப்
பெறுகசையாற் பின்னிற்பா ரின்மையே பேணும்
நறுநுதலாள் நன்மைத துணை." (நாலடி · நடிக)

இதனுள், அருந்ததியைய போலும் தமக்குப பெரும்பொருள் களை நச்சுதலாலே இரப்பாரது வறுமையே விரும்பிப் பாது காத்து, அவர்க்கு வேண்டுவன கொடுக்கு மகளிர், நாஞ செல்

கின்ற வானப்பிரத்த காருகத்திற்குத் துணையாவரெனத் தலைவன் கூறவே தலைவியும பொருளகளிற் பற்றற்ருளாய் யாமும் துறவறத்தின் மேற்செல்வாமெனக் கூறியவாறு காண்க" என்று உரை விரித்துளளார்.

"கிழவனுங் கிழத்தியும் சுற்றமொடு துவன்றி அறம்புரி மகளொடு சானற காமங் கடைக்கோட் காலை இறந்தது ஏமஞ் சான்ற பயிறறல் சிறநததன பயனே"

எனச் சூத்திரதததை தம் கருத்திற்கேற்பச் சிதைத்துக் கொண்டு கூட்டியிருக்கின்ரூர். இயல்பாகப பொருள் கொள்ளற் குரிய தொல்காபபியச சூதத்திரத்தை இவ்வாறு பலவகையாகச் சிதைத்து நலிநது பொருள எழுதின தன்மையே இநநச்சினாக் கினியர், தொல்காப்பியர் கருததுணர்ந்து உரைக்கவில்லை, தம் கருததையே விரித்துரைத்தார என்பது எளிதின் விளங்கும்

மகளை வாழ்க்கை இலலறத்தில தொடங்கித் துறவறத்தில் முடிவு பெறுவதே சிறப்பு என்பதைத் திருககுறள முதலிய அறநூல் வழியுணர்நத நச்சினாக்கினியா, அச்சிறநத கருதது அமமக்கள் வாழ்கையையே அகம்புறமெனப் பாகுபடுதது விரித்துக் கூறிய தொல்காபபியா கூற்றிலும இருப்பதாக நுழைத்துக் காட்டவேண்டுமெனறு செய்த முயற்சியே, இச் சூதிரத்தை இவ்வாறு நலிந்து பொருள்கொள்ளச செயதது என்பதை எளிதின் உணரலாம் நசசினாக்கினியர், தாம் சிறபபாகக் கண்ட கருத்துகளை நுழைக்கவே சூதிரங்களையும செய்யுட்களையும் கொண்டு கூட்டி நலிநது பொருள்கொள்வர் எனபதை அவர் உரைகளைப பயின்ரூர் அறிவா அது ஒரு வகையிற் சிறநததாகலாம. ஆயின் நூலாசிரியர் கருததுணாந்து உரைத்ததாகாது என்பது வெளிபபடை. இவா கூறிய இப் பொருளைத் தொல்காப்பியர் கருதியிருப்பாராயின் அக்கருத்து விளங்கச் சொற்களை முறையிற் கூறியிருப்பர்

இச்சூதிரத்தை நலிந்து பொருள் கொண்டது போலவே இதற்கு உதாரணமாகக காட்டிய நாலடியார செய்யுளையும நலிந்து பொருள் கொண்டே தம கருத்திற்கேற்ற வுதாரண மாக்கியுளளார். "கற்புடைப் பெண்டிர பிறர் நெஞ்சு புகார்" என்ற தமிழ்மரபை விளக்கவந்த செய்யுள் அது பெறலருங கற்பினையுடைய இந்திராணி போன்ற பெரிய பொருளையுடைய பெண்டிராயிருந்தாலும தன்னைக் காதலியாகப் பெறும் விருப் பத்தால் தன்பின் நிற்கும ஆடவா இல்லாமையையே விருமபு கின்ற பெண்டே இல்லறத்திற்கு நல்ல துணையாவாள்" என் பதே அச்செய்யுட்குரிய நேரிய பொருள் என்பது அதனை ஒரு முறை நோக்குவார்க்கும் நன்கு விளங்கும்.

மக்கள் வாழ்க்கை துறவினுலன்றி நிறைவுறாது என்பதைத் தொல்காப்பியர் அறிவர். ஆயின், அத் துறவை அகப்பொருளில் அடக்கிக் கூறுவது மரபன்று என்றே புறத்திணையியலில், "நாலிரு வழக்கிற் றுபத பக்கமும்," (புறத்திணை. 16) "காமம் நீத்த பாலின் கண்ணுமை," (புறத்திணை: 17) "அருளொடு புணர்ந்த அகற்சி" (புறத்திணை: 76) எனக் கூறியுளளார் என்பதறிதல்வேண்டும். இளம்பூரணரும், தம முன்னுரையில் வானப்பிரத்த சந்நியாசிகள இயல்பு கூறுவதாக இச சூத்திரங்களைக் காட்டியுளளமை காண்க.

இனி, தொல்காப்பியத்திற்கு வழிநூலாக அகப்பொருள் பகுதியை மட்டில் பிரித்து, 'நமபி அகப்பொருள,' என்னும் பெயரொடு விளங்கச் செய்த நாற்கவிராச நம்பியும நச்சினார்க்கினியர் கருத்தை யுடன்பட்டே, "காமஞ சான்ற," எனற சூதத்திரத்திற்குப் பொருள்கொணடு தம நூலில்:—

"மக்களொடு துவன்றி மனையறங காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழித்
தலைவனும் தலைவியும் தம்பரி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங காப்ப."

என்று விளக்கமாகக் கூறிச் சென்றார். "தலைவனும் தலைவியும் தமபதி நீஙகித் தொலைவில் சுறறமொடு துறவறம் காப்ப," என்றமையால் வானப்பிரதத நிலையையே யுணர்த்தியுள்ளார் என்பதும பெறப்படும்.

நச்சினர்க்கினியரும் நம்பியும் அச் சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள் கொணடிருப்பினும் இளமபூரணா அச் சூதத்திரம் இல்லறத்தோர இயல்பு கூறியதாகவே கொண்டுள்ளமை காண்க. அவர் கருததுப்படி அச் சூதத்திரத்திற்குப் பின் வருமாறு பொருள் கூறலாம்.

கிழவனும் கிழத்தியும்—தலைவனும் தலைவியும், காமஞ் சான்ற கடைக்கோட்காலை—பல்லாண்டு துய்ததுப் போந்தமையால் காமம் அமைதி யடையப்பெற்ற கடைசிக்காலத்து, ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி—தமக்கு இன்பத்தை மிகுவிக்கின்ற மக்களொடு நெருங்கியிருந்து, அறம்புரி சுற்றமொடு—தருமத்தையே விரும்பும் சுற்றததாரோடு கூடி, சிறந்தது பயிற்றல்—எல்லாவற்றினும் சிறநததாகிய இல்லறத்தைத் தம் மக்களுக்குப் பயிற்றுதல், இறந்ததன் பயனே—தாம் இல்லறஞ செய்து பழகிப் போந்தமையாலாய பயனுகும்; என்பது.

குழவிப் பருவத்துக் குறுகுறு நடந்து சிறு கை நீட்டி இட்டும் தொட்டும் கவவியுந் தழந்தும் நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும் மழலைமொழி பேசியும் தாய் தந்தையரை யின்புறுத்தலானும், அவ் விருமுது குரவரும முதுமைக் காலத்துத் தளர்ச்சி நீக்கி வேண்டுவன செய்து பாதுகாத்து இன்புறுத்தலானும, அவர இறந்த பின்னரும் நீரகடன் முதலிய செய்து மறுமைக்கண் தேவராக்கி யின்புறுத்தலானும் மக்களை, "ஏமஞ்சான்ற மக்கள்," என்று சிறபபித்தார். தம மக்கள் அறநெலை நிற்றறகுக தாமேயன்றி அறதனை விரும்பும் சுற்றமும் காரணமாதலபற்றி, "அறமபுரி சுறறமொடு சிறந்தது பயிறறல," என்றார். "அற மெனபபட்டதே யில்வாழ்க்கை," எனவும், "அறதனாற்றி னிலவாழக்கை யாற்றின், புறதனாற்றிற் போஒயப பெறுவதெவன்," எனவும் புகழப்படும் சிறப்புடைமையின் இலலறதனைச 'சிறநதது' என்றார பயிற்றல—பயிலச் செய்தல தாம பயிறலனறு என்பதறகுப பிறவினைச சொலலாகிய, 'பயிற்றல்,' என்னும இச் சொலலே சான்றுதலறிக. இறநதது—கழிந்தது, ஈண்டுச செய்து பழகிப் போநதமை யுணர்ததிற்று. இல்லறஞ செய்து கைவநதனை பயன் பயிற்சி பெறுத தம் மக்களுக்கு அவ விலலறத்தை யுடனிருந்து பயிற்றுதலே என்பது கருத்து 'மக்களொடு துவன்றி,' என்றமையால் வனத்தின்கண் செல்லாது மக்கள அணமையில் இருததல் பெற்றும.

இத்தகைய நேரிய பொருளை இளங்கோவடிகளும் கொண்டு தாம் சீர்பெற வியற்றிய சிலப்பதிகாரதில தாயிலை யெனிய கோவலனுடைய இருமுது குரவாபால் அமைததுக் காட்டியுள்ளார். இம முறையே யாவாபாலும் காணத்தக்க எளிய சிறந்த முறையாதலும் காண்க. தலைவன் தலைவியராய் இன்பம் துய்ததாலலாரும் முதுமைக் காலத்துத் துற வின்கண் செல்ல வியலாமையும், தந்நலம் நோக்காது மக்கள் நலங் கருதி அறத்தை அவர்க்குப் பயிற்றுதல் பெருமபானமை யோரால் கைக்கொள்ளதக்க எளிமையதாதலும் உலகியலிற் கண்டு தெளியலாம். மேலும புறத்திணையியலில், "அருளொடு புணர்ந்த அகற்சி," என வானப்பிரத்த நிலையையும, "காமம் நீத்த பால்," என முற்றும் துறத்தலையும கூறிய தொல்காப்பியர் கற்பியலினும அவற்றைக் கூறினர் என்றல் பொருந்தாமையும் உணர்க.

இளங்கோவடிகள், இத் தொல்காப்பியரின் கருத்துணர்ந்தே கோவலனையும் கண்ணகியையும் வேறில்லத்தில் வைத்ததற்குக் காரணங் கூறுகின்ற பொழுது,

மறப்பருங் கேண்மையோ டுறப்பரி சாரமும்
விருந்து புறந்தருஉம் பெருந்தண வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறுக கானல

....

ஒருதனி புணர்க்க.

என்று விளக்கினமை காண்க. இவ வடிகளில் கோவலன் இருமுது குரவருந் தம மகனுக்குமை மருமகளுக்கும் சிறந்த தாகிய இல்லறமை பயிற்றுதல் பெறப்படுமை

கோவலன் மாதவியின்பால் பிரிந்திருந்த நிலையில் அவன் தாயுமை தந்தையும் தன்னைக் காண வந்தபொழுது கண்ணகி தான் இருந்த நிலைமைபற்றிக் கூறுகின்றமுறி,

"அறவோராக் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த என்னை"

என்று கூறியிருத்தல் காண்க. கோவலன் தேற்றுத தியொழுக்கத்தால் அவன தாய் தநதையர் பயிற்றிய இல்லற வொழுக்கஙக ளனைத்தையும் கண்ணகி யிழந்ததாகக கூறி யிருபபதுமை மாதவி யைய பிரிந்து வந்து கண்ணகியோடு மதுரை நண்ணிய கோவலனும்,

"இருமுது குரவ ரெவலும் பிழைததேன்"

என்று கண்ணகிக்குத் தன் தவற்றினை யெடுத்துரைக்குங்கால் இருமுது குரவர் ஏவலாகிய இல்லறதனைதச செய்யாது பிழைத் தேன் என்று வருநதியிருத்தலுங காண்க.

இதனால் காமமை அமைந்த மூதுமைக் காலத்துத் தலைவனும் தலைவியுமை தமை மக்களோடு இருந்து தாம் பழகிய இல்லற நெறியை அவர்கட்குப் பயிற்றிக்கொண்டு தந்நலமறறு வாழ் வதுதான் முறை யென்பதை மாசாதநதுவானும் அவன் மனைவி யும் மேறகொண்ட முறையினிருந்துமை அறியலாம்

இதுகாறும் கூறியவாற்றான் தலைவன் தலைவியராயிருந்து இன்புற்றவர்கள் தம் மூதுமைக்கண் இன்புறுவது தம மக்களை அறநெறி யொழுக்கும் செயலில்தான் என்பது விளங்கும். தொல்காப்பியர், 'காமஞ் சான்ற,' என்ற சூத்திரத்தால் விதித் ததும் இளங்கோவடிகள அவர் கருத்தணர்ந்து தம் சிலப்பதி காரததில அக் கருததை இலக்கியமாக்கித் தந்துள்ளமையும் கண்டு காதலர் வாழ்வின் கடைக்கோட் காலம் இன்னது என்பை தணரலாம்.

பாராட்டுக்கூட்டத் தலைமையுரை*

அறிவிற் சிறந்த தமிழாசிரியப் பெரியோர்களே!

உங்களனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கம். நம் தமிழ்மொழிக்குச் சிறந்ததோர் தொண்டாற்றிய பெரியாரைப் பொன்னாடை போர்த்திப் பாராட்டுவதற்காக நாம் இன்று இங்கு குழுமியிருக்கிறோம். அத்துடன் தமிழ்த் தொண்டாற்றி அணைமையில் மறைந்த புலவர் பெருமக்களது மூவருடைய திருவுருவப்படங்களை மூன்று தமிழ்ப் பேராசிரியர்கள் திறந்துவைக்கப் போகிறார்கள். இவ்விழாவில் எனக்குப் பங்குகொள்ளவேண்டுமென நண்பர் ஏ சி செட்டியார் அவர்களும் செயலாளரும் என்னைப் பணித்தபோது நான் தயக்கத்துடன் ஒப்புக்கொண்டேன். நான் இப்பேரவைக்குத் தலைமைதாங்க எவ்வாற்றலும் தகுதியுடையேனல்லேனெயினும அவர்கள விருப்பத்தை மறுக்க இயலாமையாலும் தமிழாசிரியர்களால் தமிழுக்கு அரிய தொண்டு சேவை செய்த ஒரு பேராசிரியரைப் பாராட்டுவதற்காக நடத்தப்பெறும ஒரு விழாவில் கலந்துகொள்ளும வாய்ப்புக் கிட்டியபோதும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளுதல் கடமை என்று கருதியதாலும அவர்கள் விருப்பத்திற்கிணங்கி வந்துள்ளேன். என்னைச் சொற்பொழிவு நிகழ்த்துமாறு வற்புறுத்தியிருந்தால் ஒருகால் நழுவியிருப்பேன். தலைவன் என்ற முறையில் இயன்ற அளவு பேச அவகாசம இருப்பதோடு ஏனைய நிகழ்ச்சிகளை ஆரம்பமுதல் இறுதிவரை அண்மையிலிருந்தே "எனைத்தானும நல்லவை கேட்க" எனறபடி கேட்டு ஆனந்திக்கும் வாய்ப்பும உண்டல்லவா? நண்பா செட்டியாரவர்கள் குறிப்பிட்டதுபோல, எனக்குத தமிழ்ப்பற்று உண்டு ஆனால், புலமையொன்றும கிடையாது. திருக்குறள ஆர்வம் உண்டு. தமிழ் மக்கள மட்டுமேயன்றி மனிதராய்ப் பிறந்த உலகிலுள்ள மக்கட்பகுதியினர் அனைவரும் அதை வாழ்க்கை நூலாகக் கொண்டு வாழவேண்டுமென்னும கொள்கையும உடையேன்.

திருக்குறள்—தமிழ் மறை, தெய்வநூல், பொய்யாமொழி, பொதுமறை என்று பலவாறுகப் போற்றப்படும் தலைசிறந்த உலக நீதி நூல் அது இன்றைக்குச் சுமார் 2000 ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றியபோதிலும, அன்றும் இன்றும என்றும பயன்படும் தன்மையுடையது. இவ்வுலகில் எல்லாப்பகுதிகளி

---

*அண்ணாமலைப் பல்கலைக கழகப் பட்டமளிப்புவிழா மண்டபத்தில், "திருக்குறள் உரைவளம்" இயற்றிய திரு. ச. தண்டபாணி தேசிகரவர்களைப் பாராட்டக்கூடிய சென்னை மாநிலத தமிழாசிரியர மாநாட்டுக் கூட்டத்தில் தென்னார்க்காடு மாவட்டக கலெகடர் திரு. அ. உதண்டராமன் பிள்ளை (ஐ.எ.எஸ்.) அவர்கள் ஆற்றிய தலைமையுரை.

ுமை எல்லா மக்களாலும் போற்றப்படுகிறது இதனைப் பல் வேறு நாட்டினர் தங்கள மொழிகளிலே மொழிபெயாத்திருப் பதே இதன் சிறப்பை நன்கு உணாத்துகிறது. பல்வேறு சம யத்தினருமை இதனைத் தங்கள் மதங்களில் உளள கருத்துக்களைப புலபபடுதுவதாக ஏற்றுகெகாள்வதைக காண்கிறோம். கடவுள உண்மையில நமபிக்கையில்லை என்போரும் ஒருசில குறளகள நீங்கலாக இதனூலை வாழ்க்கைககு வழிகாட்டும் அரிய நீதி நூலாக ஒபபுக கொளகிறார்கள். "வள்ளுவன் தனனை யுலகி னுக்கே தநது வான்புகழ் கொணட தமிழ்நாடு" என்று பாரதி யார புகழ்ந்ததை உலகமே வழிமொழிகிறது

திருக்குறளின் சிறபபைச் சுருங்கக் கூறுமிடத்து அதில் எல்லாப பொருளகளுமை அடங்கியிருக்கின்றன அதனிடதது இலலாத பொருள் யாதொன்றுமிலலை. அறத்தை உணர விருமபுவாககு அறநூலாகவும, அரசியலையறிய விருமபுவாக குச சிறநதமேதார் அரசியல் நூலாகவும, பொருளியலறிய வேண டுவோாக்கு ஓரிய பொருள் நூலாகவும, இனப நூல் வேண்டு வோர்க்கு இன்ப நூலாகவும, பேரின்பம வேண்டுவோர்க்குப பேரின்ப நூலாகவும், பொதுவாக எல்லா மக்களுக்கும் வாழுக கைக்கு வழிகாட்டும் வாழ்க்கைத துணை நூலாகவும அமைநதுள ளது திருக்குறள அதன் சிறபபுபபறறிக தமிழாசிரியாகள குழுமியிருககும இபபோரவையில் அதிகம் பேசத் தேவையிலலை.

இத்தகைய ஈடும் இணையுமறற அரிய நூலுக்கு அவர் காலததிலேயே உரையமையாத காரணத்தால் பிற்காலததில் தோன்றிய பல உரையாசிரியர்கள தங்கள் ஆராய்ச்சியறிவைக் கொண்டு உரை எழுதியிருக்கிறாகள். நூலாசிரியருடைய கொள்கைகளையும் கருத்துக்களையும் முற்றும் உணர்ந்து விளக் கம காண்பது எளிதன்றெனினும், பரிமேலழகர் ஏனைய உரை யாசிரியாகளைக் காட்டிலும் சிறந்த முறையில் உரை எழுதியிரு ப்பது யாவரும அறிநததே. திருக்குறளுக்கு உரையாசிரியர்கள கருமர், மணக்குடவா, பரிப்பெருமாள், காளிங்கர் முதலிய பதின்மர் என்று தெரிகிறது. ஆனல், இதுகாறும் பரிமேலழ கர், மணக்குடவர் உரைகள் அச்சில் வெளிவந்துள்ளன. இப் போது நமமிடை வீற்றிருக்கும் உயர்திரு. கண்டபாணி தேசிக ரவர்கள் "திருக்குறள் உரைவளம்" என்ற அரிய நூலில் உரை யாசிரியர்களின் உரைகளை எல்லாம் திரட்டித் தொடுத்துத் தமி ழுலகுக்குப பெரிதும் பயன்படும் அரியதோர் சேவை செய் திருக்கிறார்கள். இது எளிதாக இப்போது தோன்றலாம. ஆனல், இதுவரை இருக்குமிடம் தெரியாமலிருந்த பல்வேறு உரைகளையும கண்டு கவர்ந்து அவற்றைத் தொடுத்து அச்சிட்டு

வெளியிடுவது மிகவும் கடினமான செயல். அதற்குப் பல ஆண்டுகள் சலியா உழைப்பும் குன்று ஊக்கமும் போராற்றலும் இருந்தாலன்றிப் பயன்கிட்டாது "செயற்கரிய செய்வார் பெரியர்" என்பதற்கிலக்காக, இவ்வருமபெருஞ் சேவைசெய்த இப்போராசிரியர் தமிழணங்கு பெற்ற அவப் புதல்வருள் ஒருவர் என்றே போறறப்படுதல் வேண்டும். இன்னரைப் பாராட்டிப் புகழ்ந்து வாழ்த்ததுவதற்காகக குழுமியிருக்கும் இவ் வமயம இவ்வுரைவள மாகிய அரிய நூல் நல்ல முறையில் அழகாக அச்சிடப்பட்டு வெளிவருதற்குப் போதிய ஊக்கமும் உதவியும் அளிதத ஸ்ரீலஸ்ரீ மகா சந்திதானம் தருமபுரம் ஆதீன கர்த்தரின் பெருங்கருணை த திறனையும் நாம் போற்றிப் பாராட் டக் கடமைப் பட்டுள்ளோம். இவ்வரிய "திருக்குறள் உரை வளம்" என்னும் நூல் இயற்றிய தேசிகர் அவர்கள் சேவையை உங்கள் சார்பாகவும் தமிழ்மக்கள் அனைவருடைய சார்பாகவும பாராட்டுவதுடன், இன்னும் இப்போராசிரியர் தொடர்ந்து பல நூல்கள் இயற்றித தமிழ்த் தொண்டாற்றி வர அன்னருக்கு நீண்ட ஆயுளும் உடல் நலமும் பிறவெல்லா நலன்களும் தந்தருள வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனிணையடிகளை இறைஞ்சுகின்றேன்.

மதிப்புரை

காவேரி என் காதலி.

[ஆசிரியர்: 'நாதி' (ஆசிரியர் பெயர் புனைவாக இருக்கலாம்.) பக்கம் எஉ. விலை அணா கூ. வெளியிட்டோர் நக்கீரன் வெளியீட்டகம்; உத்தமபாளையம், மதுரை மாவட்டம்.]

இந்நூல் பல்வகைப் பாக்களால் இயன்றது. ஆசிரியர் பல அமயங் களில் பாடிய பாடல்களின் தொகுப்பேயாகும். பாடல் அருகிய இக் காலத்தில் இவர்கள் போன்றார் பாட முன்வந்திருப்பது மகிழ்சசிக் குரியது. இதில் கடவுள் வாழ்த்து முதல் உழவன் தைப்பொங்கல் இறுதியாக உள தலைப்புக்களில் தொகுக்கப் பெற்றுள்ளது சுவை யுள்ள பாடல்கள்; மக்கள் படித்து இன்புறற்குரியது. இச்சிறு நூற்குப் பிழைதிருத்தம் இறுதியில் சேர்த்திருக்கிறது. அடுத்த பதிப்பிலாவது பிழையின்றி வெளிவருமென நம்புகின்றோம்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) தமிழர் பேரவை அறிக்கை :

தமிழர் பேரவையின் பொதுச செயலாளர் திரு கி ஆ. பெ விசுவ நாதம் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிடுகிறார் :—

தமிழ, தமிழர, தமிழநாடு நலன்களைக கருதித் 'தமிழர் பேரவை' அமைக்கப்பெற்றுயிற்று. அதற்கெனச சட்ட திட்டங்களும் வகுக்கப் பெற்று, சட்டப்படி பதிவுசெய்தும் ஆயிற்று. இப்பேரவை சாதி, சமய, கட்சி பேதமற்ற ஒரு அமைப்பாகும் கன்னட சமயுத்த சம்மேளனம, கேரள ஜகதிய சங்கம், ஆந்திர மகாசபை ஆகியவைகளைப் போன்று 'தமிழர் பேரவை' தமிழகத்தின் தனி உரிமையுடைய அமைப்பாக விளங்கும் தமிழ்நாட்டைச சிறந்த நாடாக ஆக்கவும், தமிழ்மொழியை ஆட்சி மொழியாகச செய்யவும், தமிழ் மக்கள் இழந்த உரிமைகளைப் பெறவும தமிழர் பேரவை போரிடும்

நாட்டிற்கும், மொழிகும், மகளுக்கும் தொண்டு செய்யும் எண்ணமுடைய அன்பாகள் அனைவரும் தங்கள் தங்கள் ஊர்களில் தமிழர பேரவைகளு உடனே கிளைகளை அமைக்கவேண்டும். முதலில் தேவையானவாகள் 7 பேர்கள். அவாகளே தலைவர், துணைதலைவா இருவர், செயலாளர, துணைச செயலாளர, பொருளாளர், கணக்காய வாளர் என அமைத்துக் கையொப்பமிட்டு 'தமிழர் பேரவை 87, வெங்க டேசபுரம், சென்னை - 28' என்ற முகவரிகு எழுதினால் உறுப்பினா சோகும் பற்றுச சீட்டுகள் உடனே வரும் உறுப்பினாகளைச சேர்த்த தும் அவர்களிலிருந்து 12 பேர்களைச் செயற்குழு உறுப்பினாகளாகத தேர்ந்தெடுத்துக கொள்ளலாம். மொதம் கிளைக குழுவினா 19 பேர.

200, 100, 50 க்குக் குறையாத உறுப்பினாகளைக் கொண்ட கிளைகள் முறையே, முதல், இடை, கடை எனக கருதப்பெற்று வரும். ஆண்டுக் கட்டணம் அணா 4.

(உ) தமிழ்மொழிபற்றி டாக்டர் இராதாகிருஷ்ணன் கருத்து

தில்லி அரசாங்கஅலை உறுப்பினரான டாகடர் இராதாகிருஷ்ணன் பத்திரிகை நிருபாகள் மாநாட்டில் பத்திரிகை நிருபர்களைக கண்டு உரையாடியபோது கூறியது :

தமிழ்மொழி தொன்மைவாய்ந்தது; தமிழன் இதனால் பெருமை கொள்ள முடியும்; இந்தியன் என்ற முறையில் நாங்களும் அதிற் பெருமை கொள்கின்றோம் இந்திக்கும் தமிழுக்கும் போட்டி கிடை யாது; எல்லா இந்தியமொழிகளும் தன்னந்தனியாக அந்தந்த நாடு களில் அரசியல் மொழியாகவும் கற்கும் மொழியாகவும் வாணிப மொழியாகவும் வழங்கும் என்றார்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பா அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.